# செவ்வந்தி

சட்டம் - கலை - இலக்கியம்

ஆசிரியர் : **பா. தவபாலன்**

மாத சஞ்சிகை


3-வது ஆண்டு

இதழ்

**26**

- உள்ளே இலவச நேரசூசிகை
- தேம்பாவணி
- வடக்கு - கிழக்கின் நீர்வளம்
  குளங்களின் பெயர்கள், விபரங்களுடன்
- கிறிம்பகந்தா கொலை வழக்கு

விலை 1.25



mws மில்க்வைற்

# மில்க்வைற் மேலுறைகளின் பெறுமதி

1. மாதாந்தச் செய்தி ஒன்று அல்லது வெளியீடுகளில் ஒன்று
நீலசோப் உறை 10 அல்லது நீம் சோப் உறை 2 அல்லது பார் சோப் உறை 2 அல்லது மெடிக்கேட்டட் உறை 2 அல்லது சலவைப் பவுடர் உறை 2

2 பொலித்தீன் பெரிய பை அல்லது சுவாமிப் படம் ஒன்று
நீலசோப் உறை 100 அல்லது நீம் சோப் உறை 10 அல்லது பார் சோப் உறை 10 அல்லது மெடிக்கேட்டட் உறை 10 அல்லது சலவைப் பவுடர் உறை 10

3. துவாய் ஒன்று — நீலசோப் உறை 500

## வியாபாரிகளுக்கு விசேட பரிசு

72 சவர்க்காரம் சுற்றி வரும் உறை 50 அல்லது 36 சவர்க்காரம் சுற்றிவரும் உறை 100 அல்லது 30 சதம் சோப் சுற்றிவரும் உறை 50 அனுப்பி துவாய் ஒன்று பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி: மில்க் வைற் யாழ்ப்பாணம்.

---

யாழ்நகரில் புதியதோர் ஸ்தாபனம்

# வி மா கி

- செரமிக்ஸ் உற்பத்திப் பொருட்கள்
- ரீ-செற், டின்னர்-செற், கிளாஸ்-செற்
- அழகு சாதனங்கள் — அன்பளிப்புப் பொருட்கள்
- குளியலறைப் பாவனைக்கேற்ற மாபிள் பொருட்கள் மற்றும் முட்டை, பிஸ்கற் அனைத்தையும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்,

## வி மா கி

27/3 மின்சார நிலைய வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

போட்டியை வளர்த்துக் கொள்
பொறுமையை வளர்க்காதே.

# செவ்வந்தி

மாத சஞ்சிகை

மூன்றுவது ஆண்டு

இதழ் இலக்கம்: 26

ஆசிரியர்

**பா. தவபாலன்**

கதைகள் யாவும் கற்பனை.

கட்டுரை, கவிதைகளில் உள்ள கருத்துக்களுக்கு அவற்றின் படைப்பாளிகளே உரிமையாளர்கள்.

ஆக்கங்களில் வேண்டிய திருத்தங்களைச் செய்ய ஆசிரியருக்குப் பூரண உரிமையுண்டு.

சந்தா விபரம்

ஒரு ஆண்டு — 15-00

அரை ,, — 8-00

தபாற் செலவு இலவசம்

முகவரி:

'ஆசிரியர்'

செவ்வந்தி கலைக் கூடம்

185/4 கில்னர் லேன்

யாழ்ப்பாணம் — இலங்கை.

## வட மாகாணம் பின்தள்ளப்படுகிறதா?

★ பலாலி விமான நிலையத்தை மூடியமை,

★ பல வங்கிகளை மூடியமை,

★ தமிழ் மாணவர்கள் விரிவுரையாளர்கள் பற்றிய அபாண்டமான பேச்சு,

★ பொலிஸ் - இராணுவக் குண்டர்களின் கொடூரத் தாக்குதல், இனவெறியைத் தூண்டும் கவிதைகள்.

''சுடுகாடு போல் காட்சியளிக்கிறது கிழக்கு மாகாணம். வடமாகாணத்தைச் சுடுகாடாக்க முயற்சிகள் நடைபெறுகின்றன '' இக் கூற்றுக்களைப் பாமர மக்கள் முதல் படித்தோர் வரை தம்மிடையே பரிமாறிக் கொள்வதை இன்று நாம் அவதானிக்கலாம். காரணம் இலங்கையின் இரண்டாவது நகராகக் கணிக்கப்படும் யாழ் நகரில் உள்ள விமான நிலையத்தை மூடியமை, வங்கிக் கிளைகளை ஏராளமாக மூடியமை, 'தமிழ் மாணவர்களுக்கு அதிக புள்ளிகளை முறையற்ற வகையில் விரிவுரையாளர்கள் போட்டமையாலேயே அதிக அளவில் சிங்களவர் பல்கலைக் கழகம்போக முடியாமல் உள்ளனர்' என்ற அபாண்டமான பேச்சுக்கள், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பொலிஸ் - இராணுவக் குண்டர்களின் கொடூரத் தாக்குதல், தீ வைப்பு, கடை உடைத்தல், இன வெறியைத் தூண்டும் கவிதைகளை பொறுப்பு வாய்ந்த அதிகாரியின் பெயரில் உப பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பியமை, இவை தவிர சில உப தபாற் கந்தோர்களை மூடுதல், தேசிய பல்கலைக்கழகமாக இயங்க முடியாவிடில் அதை மூடிவிட வேண்டுமென்று சிங்கள மக்கள் கூறுவர் என்ற அமைச்சரின் பேச்சு, மேல் நீதிமன்றம் மூடப்படப் போகிறது என்ற வதந்தி, தமிழ் ஊர்களின் பெயர்களை சிங்களப் பெயராக மாற்ற வேண்டுமென்ற உறுப்பினர் ஒருவரின் கோரிக்கை போன்றவற்றைப் பார்க்கும் போதும், கேட்கும் போதும் ஒரு நகரின் முக்கியத்துவத்தை குறைக்கச் செய்வதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும் என்று மக்கள் கேட்பதிலும் நியாயமில்லாமல் இல்லை. இதில் சிலவற்றை மறுத்து அமைச்சர்கள் மறுப்புத் தெரிவித்தாலும் மக்கள் நம்ப மறுக்கிறார்களே.

அரசாங்கம் வடக்கு, கிழக்கில் செயலிழந்து விட்டதாலேயே இவ்வாறு செய்கிறது என யாழ். பாராளுமன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் அவர்கள் சபையில் எச்சரித்துள்ளார். இந்நிலையில் அரசு மேற்கூறிய தனது செயற்பாடுகளை மறுபரிசீலனை செய்து தொடர்ந்தும் செயற்பட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவற்றினால் இன்று மக்கள் படும் இன்னல் சொல்ல முடியாதது.

'எதனையும் அழிப்பது சுலபம்
ஆக்குவது கஷ்டம்'


இதனை உணர்ந்து, ஒரு நகரின் முக்கியத்துவம்குறைக்கப்படுவதை அரசு விரும்பாது எனச் செவ்வந்தி நம்புகிறது.

ஆசிரியர்

# கிறிம்பகந்தா கொலை வழக்கு 1

★ வழக்கைப் படிக்கு முன்...

இந்த வழக்கு எமது கலாச்சாரத்திற்கும் பண்பாட்டிற்கும் முரண்பாடான ஒரு வழக்கு. காதல், திருமணம் போன்றசொற்களைக் கேட்கும்போது இளம் வாலிபனும் யுவதியுமே எமது நினைவுக்கு வருவர். இதற்கு முரணுக திருமணமான ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் விளைந்த காதல் நாடகத்தின் விளைவே இவ்வழக்கிற்குக் கருவாக அமைந்துள்ளது.




முரண்பாடுகள் என்றுமே முரண்பாடுகள் தாம். எனவே தந்தையின் காதல் நாடகத்தினைக் கண்ணுற்ற மகனின் இதயத்தில் 'முரண்பாடு' தோன்றியதில் வியப்பேதுமில்லை. இத்தகைய வழக்குகளை செவ்வந்தி வழங்குவதன் நோக்கம் இத்தகைய முரண்பாடுகள் எமது சமுதாயத்தில் நடைபெறக் கூடாதவை. பிடுங்கி எறியப்பட வேண்டியவை என்பதேயாகும்இதோ... வழக்கு...

1966-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 8-ம் திகதி. தெஹிவளைச் சந்திக்கருகேயுள்ள வேதக் கோயிலினருகே ஒரே சனக்கூட்டம். வேதக்கோயிலின் கட்டிடத்துக்கு அருகே ஒரு பாடசாலை. அதற்கப்பால் கொஞ்சந் தள்ளினுற் போல ஒரு கிணறு. இக்கிணற்றைச் சுற்றித்தான் ஒரே சனக்கூட்டம். அதன் ஆழம் ஐந்தடி இருக்கும். இந்தக் கிணற்றின் தண்ணீருக்கு நல்லமதிப்பு. தீர்க்க முடியாத நோய்களையெல்லாம் தீர்த்து வைக்கும் அற்புத சக்தி வாய்த்த தண்ணீர் என மக்களிடையே பரவலான அபிப்பிராயம் இருந்ததே இதற்குக் காரணம். அது மட்டுமல்ல ஏழை எளியவர்கள், வீட்டில் கிணறு இல்லாதவர்கள், சேரிகளில் வாழ்வோர் இவர்கள் எல்லோருக்கும் தஞ்சம் அளித்து வந்ததும் அக் கிணறுதான்.

அன்றைய தினம் சனக்கூட்டம் இவ்வளவு பெருமளவில் நின்றதற்குக் காரணம் என்ன? அவ்வளவு பேரையும் வியப்பிலும், சோகத்திலும், இவை இரண்டுங் கலந்த பயத்தினுலும் ஆழ்த்திய நிகழ்ச்சிதான் என்ன?

கிணற்றை எட்டிப் பார்த்தால்......!

அங்கு ஒரு சிறுவனின் பிணம் மிதந்து கொண்டிருந்தது. அச்சிறுவனின் பெயர் 'கோதபாயா' எனப் பின்னர் தெரியவந்தது.

பிணம் லுணுவ ஆசுப்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மரணவிசாரணை அதிகாரியின் விசாரணை நடைபெற்றது.

---

சட்டத்தரணி

**கே. சற்குணநாதன்**

---

''நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் [ASPHYXIA] இம்மரணம் நடைபெற்றுள்ளது'' இதுவே மாவட்ட வைத்திய அதிகாரியின் தீர்ப்பு.

''இச்சிறுவனின் உடலில்எவ்வித காயமும் தென்படவில்லை. எனவே அவன் கொலை செய்யப்படவில்லை. தற்கொலையே நடைபெற்றுள்ளது'' இதுவே மரண விசாரணை அதிகாரியின் தீர்ப்பு. உடல் அடக்கம் செய்யப்படுவதற்கான கட்டளை இடப்பட்டது. பொலீசார் மேலும் விசாரணை செய்யவேண்டும் எனவும் சொல்லப்பட்டது.

சிறுவனது பெற்ருேர் தெஹிவளையைச் சேர்ந்தவர்கள். இவனது தந்தையின் பெயர் போதி

பாலா கிறிம்பக்கந்தா. இவருக்கு மூன்று பிள்ளைகள். தெஹிவளை மிருகக்காட்சிச்சாலைக்கு மீன்களை விலைக்குக் கொடுப்பது இவரது தொழில்.

1966 பெப்ருவரி 10-ம் திகதியிலேயே கோதாவின் உடல் அடக்கஞ் செய்யப்பட்டது. உண்மையிலேயே இது தற்கொலையா? தற்கொலை செய்யும் அளவிற்கு குடும்பத்தில் என்ன தகராறு? யாராவது சிறுவனை அடித்துத் துன்புறுத்தினார்களா? துன்புறுத்திய பின்பு அவன் இறந்தானா? இறந்த பின்பு கிணற்றில் போடப்பட்டானா? அப்படி அடித்துத் துன்புறுத்தப்படுவதற்கு காரணம் என்ன? காரணம் இல்லாமல் காரியம் நடைபெறுமா? இவை அனைத்தும் மக்கள் மனதில் எழுந்த கேள்விகளாகும். இதே கேள்விகள் பொலீஸ் வட்டாரத்திலும் அலைமோதின.

சி. ஐ. டி. பிரிவினரும் துரித கதியில் இயங்கினர். முடிவு ஓரிளம்பெண் அகப்பட்டாள். அவளது பெயர்தான் போலின் டி குறூஸ்.

போலினின் கேசம் கட்டையாக வெட்டப் பட்டிருந்தது. குதியுயர்ந்த செருப்பு. முகத்தில் எவ்வித பரபரப்புமில்லை. இளம் பெண்ணுக்கும் சிறுவனின் மரணத்திற்கும் என்ன தொடர்பு?

தொடர்பு இருந்ததோ இல்லையோ, அவள் கொழும்புதெற்கு நீதவானாக இருந்த திரு. சிவா செல்லையா அவர்கள் முன்பு கொண்டுவரப்பட்டு, விளக்க மறியலில் வைக்கப்பட்டாள். இது முடிந்து ஒருமாதமாகவில்லை.

கிறிம்பகந்தாவும் பொலீசாரினால் கைது செய்யப்பட்டார். இருவருக்கும் எதிராகச் சிறுவனைக் கொலை செய்த குற்றச்சாட்டு.

ஒரு தந்தை தன் மகனைக் கொலை செய்வானா?

சில சமயங்களில் எங்கள் வசதிக்காக நாங்கள் செய்யுங் காரியங்கள் எங்களுக்குப் பெரும் உபத்திரவத்தைத் தரக் கூடிய விடயங்களாக மாறி விடுகின்றன இல்லையா? ஆம்! இந்த டயறி எழுதும் பழக்கம் இருக்கிறதே இதைப் போல நல்ல பழக்கமும் இல்லை. இதைவிடக் கெட்ட பழக்கமும் இல்லை.

போலினின் டயறியும் பொலீசாரின் கையில் அகப்பட்டு விட்டது. அதன் ஒவ்வொரு பக்கமும் புரட்டிப் பார்க்கப்பட்டது.

''அவரைச் சந்தித்தேன். அவர் மிகவும் தேவையானவர்''

''என்னால் எதையும் புரிந்து கொள்ள முடியாமல்இருக்கிறது''

''எனது உணர்ச்சிகள் என்னைக் கொல்கின்றன. ஒரேமுறையில் என்னைக் கொன்றுவிட்டால் பரவாயில்லை. அணுஅணுவாகக் கொல்கின்றனவே. அந்தச் சம்பவத்தின் பின் என்னால் நிம்மதியாக இருக்க முடிவதில்லை''

''என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டேன். ஒன்றின் முடிவு இன்னொன்றுக்கு ஆரம்பமாக இருக்குமல்லவா? நான் துணிந்து விட்டேன்''

''ஏன் அதைச் செய்தேன்? நான் அதைச் செய்தேனா? என்னால் நம்ப முடியவில்லை. உனக்காக நான் அழுகிறேன். எனக்காக யார் அழுகிறார்கள்? சிரிக்க முயன்றேன் முடியவில்லை. நிம்மதியாக அழவும் முடியவில்லையே! ஓ... கடவுளே என்னை ஏன் படைத்தாய்?''

தொடர்பில்லாத இந்த வசனங்கள் எதற்தாகப் போலினால் எழுதப்பட்டன? எதை நினைத்து அவள் அழுதாள்? எதை நினைத்து வெதும்பினாள்? அவளது இரகசியம் அவளுக்கு மட்டுந்தானே தெரியும்? அந்த இரகசியம் அம்பலத்துக்கு வந்து விட்டதோ...

[தொடரும்]


★ இதோ உங்கள்
சிந்தை கவர

★ சிறந்த ஈழத்து நாவல்

★ தவறாது வாசியுங்கள்!

'மழைக்குறி'


இலங்கை முழுவதும்
வேகமாக விற்பனையாகிறது.

★ விலை 3/50

★ ஆசிரியர்:

சி. சுதந்திரராஜா


★ சிறைச்சாலைகள் பூட்டப்படுவன மட்டுமல்ல, திறக்கப்படவும் வேண்டும். இல்லையேல் அவை தகர்க்கப்பட்டு விடும்.




★ எம். கிருபானந்தன்
' சாயி பவனம்'
கொழும்பு - 12.

கே. தலைநகரில் செவ்வந்தியைக் காணாது தவிக்கிறேன், அவளைத் தற்போது இங்கு காணமுடிவதில்லையே. அவளை நீங்கள் அனுப்பத் தவறியதன் மர்மம் என்ன?

ப. அன்பு வாசகரே! செவ்வந்தியின் சில பிரதிகள் வெளியாகிச் சில மாதங்களிலேயே விற்பனையாகி விட்டதால் அனுப்ப முடியாதுபோய் விட்டது. தற்போது இலங்கை முழுவதும் போதியளவில் அனுப்பியுள்ளோம். நீங்கள் பிரதிகள் ஏதாவது தவறவிட்டால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ எவ். ஆர். வித்தகன்
தாராபுரம்.

கே. என் உயிர் நண்பனுடன் விளையாட்டாகக் கதைக்காது விட்டேன். அது உண்மையாகி விட்டது. பிரிந்திருக்க முடியவில்லை. என்ன செய்வது?

ப. விளையாட்டு வினையாகிவிட்டது. நீராகத் தானே கதைக்காது விட்டீர். 'அந்த நிலையை விளக்கி' உமது உயிர் நண்பனின் நட்பைப் புதிப்பிக்க நீரே நேரில் சென்று கதையும். பலன் உண்டு.

கே. முஸலீம்கள் அனைவரும் பெரும்பாலும் உடலுறவு கொள்ளுவதில் வல்லவர்களாக இருக்கிறார்கள்! காரணம் என்ன?

ப. உமது பெயரைப் பார்த்தால் முஸ்லீம் போல் தெரியவில்லை. எவ்வாறு கண்டு பிடித்தீர் அவர்கள் அனைவரும் உடலுறவில் வல்லவர்கள் என்று? இந்த விடயத்தில் இலங்கை மக்களே வல்லவர்கள் என்பதை ஒரு நிமிடத்தில் பிறக்கும் பிள்ளைகளைக் கொண்டு ஊகிக்கக் கூடியதாக இருக்கிறது.

★ செல்வி கதீஜா
கல்முனை.

கே. மாணவப் பருவத்தில் உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவம் ஒன்று கூறுவீர்களா?

ப. அன்பு வாசகியே! இன்னமும் நான் மாணவன்தான். இதுவரையில் எனக்கு ஏற்பட்ட மறக்க முடியாத சம்பவம்: நான் இந்த செவ்வந்தி இதழை ஆரம்பித்து இன்னுவரை அது தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதும், அதன் நாளாந்த வளர்ச்சியுந்தான்.

கே. மாணவர்கள் விடயத்தில் செவ்வந்தி அதிக அக்கறை காட்டுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் ஏன் இந்த அக்கறை?

ப. நானும் ஒரு மாணவன் என்பதால் அவர்களுக்குள்ள பொதுவான பிரச்சனையை உணர்கிறேன். அதை என்னால் உணர்ந்தளவு தீர்க்க முயல்கிறேன். அதனாலேயே இவ்வக்கறை.

★ செல்வி ஆ. பரமேஸ்வரி
7-ம் வட்டாரம்
மண்டைதீவு!

கே. தனது கணவரைத் தெய்வமாக மதிக்கும் மனைவியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப. அன்பில் தாயாகவும், உறவில் தாசியாகவும், அறிவுரை வழங்குவதில் நல்லாசிரியராகவும் இருக்கும் மனைவியிலும் மேம்பட்டவள்.

கே. உங்களுக்குச் செவ்வந்திப் பூவை மிகவும் பிடிக்குமா?

ப. அடர்த்தியான, அழகு நிறைந்த, செவ்வந்தி மலர் எனக்கு மிகவும் பிடிக்கும் என்பதை நீங்கள் கண்டுபிடித்து விட்டீர்களே.

# செவ்வந்தி மலர் மாணவர்களாகிய எமக்கு இதயமலர்!

★ சி. ஆனந்தராசா
பரந்தன்.


ஆசிரியர் குறிப்புரையில், இலக்கியத்தை வைத்து வயிறு வளர்க்க விரும்புபவர்களுக்கும், ஒசிப் பத்திரிகையை விமர்சிப்பவர்களுக்கும் நல்ல அடி கொடுத்துள்ளீர்கள். துணிச்சலான கருத்துக்களுக்கு எனது பாராட்டுக்கள். ஈழத்து நூல்களுக்கு இலவச விளம்பரம், புதுயுகம் பாராட்டப் படவேண்டிய பகுதிகள். செவ்வந்தியின் இரண்டாவது ஆண்டுமலர் மாணவர்களாகிய எமக்கு இதய மலர்.

★ தேசப்பிரியன்
வெள்ளவத்தை.

மிக நீண்ட காலத்துக்குப் பின் இலங்கையில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் செவ்வந்தியை இலங்கையில் மூலைமுடுக்கெல்லாம் காணக் கூடியதாய் இருந்த வேளையில் தலைநகரில் காணவில்லையே. எம்போன்ற வாசகர்கள் சஞ்சிகை நின்று விட்டதோ என்று எண்ணியிருந்த வேளையில் சிந்தையைக் கவரும் விதத்தில் உங்கள் இரண்டாவது மலர் என்னைக் கவர்ந்து விட்டது. ஒவ்வொரு பக்கமும் சேகரிக்க வேண்டிய பொக்கிஷங்கள். செவ்வந்தியின் ஒவ்வொரு இதழையும் இவ்வாறு வெளியிட வேண்டுகிறேன்.

★ செல்வி க. றேணுகா
பெரிய விளான்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சை எடுக்கும் கலைப்பிரிவு மாணவர்கள் தவறாது படிக்க வேண்டிய ஒரு நூல்போல் அமைந்து விட்டது செவ்வந்தி கட்டுரைகளில் உள்ள தெளிவால் அதனை ஒரு தடவை படித்ததுமே பதிந்து விடுகிறது. ஆசிரியர் தலையங்கத்தை வாசித்ததுமே அதிர்ச்சி அடைந்தேன் இப்படி ஒரு இனவாதம் நிறைந்த ஒருவர் எமக்கு பரீட்சை ஆணையாளராக இருந்திருக்கிறரே என்று. நிச்சயம் அவர் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். இரண்டாவது ஆண்டை நிறைவு செய்து மூன்றாவது ஆண்டை நோக்கி வெற்றிப் பயணம் செய்யும் செவ்வந்திக்கும், ஆசிரியருக்கும் எனது அன்பு வாழ்த்துக்கள்.





★ இரா. திருஞானசம்பந்தன்
தேற்றாத்தீவு — 1
களுவாஞ்சிக்குடி.

ஐயா! மேற்படி தங்கள் இதழான 'செவ்வந்தி'யின் நறுமணத்தை மாதந்தோறும் பருகி வருபவர்களுள் நானும் ஒருவன். செவ்வந்தியின் சகல பிரதிகளையும் தொகுப்பாக வாசிப்பதில் ஆவல் கொண்டுள்ளேன். உடன் அறியத் தந்து எனது ஆவலைப் பூர்த்தி செய்யவும்.

★ செல்வி ஜயகலா செல்வநாயகம்
குருமண்வெளி
களுவாஞ்சிக்குடி.

அன்பின் செவ்வந்தி ஆசிரியருக்கு! நல்ல தரமான, சுவையான பொருளியல், தமிழ் கட்டுரைகளையும் சட்ட அம்சங்களையும் வெளியிட்டமைக்கு நன்றி. கலைப் பீடத்தில் கல்வி பயிலும் எம் போன்ற மாணவர்களுக்கு செவ்வந்தி மிகவும் பயனுகவுள்ளது. செவ்வந்தனின் கேள்வி - பதில் பகுதி மிகவும் சுவையாகவுள்ளது. செவ்வந்தியே உனது புகழ் ஒவ்வொரு இல்லங்களிலும் கொடிகட்டிப் பறக்க எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.




# கடந்த இதழில் நாம் கேட்ட வினா இதோ!

ரஞ்சன், கலா இருவரும் இளம் தம்பதிகள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் ரமேஸ். இளையவள் உமா. ரஞ்சன் வெளிநாடு செல்வதற்குத் தயாராகிறான். இவ்வேளை மனைவியான கலா அவனைப் போக வேண்டாமென்று தடுக்கிறாள். கணவனோ அவள் பேச்சைக்கேளாது பயணமாக ஆயத்தமாகிறான். கலா அவனைப் போகவேண்டாமென்று தடுத்ததோடு நிற்காது அவனது பாஸ்போட் மற்றும் முக்கிய பத்திரங்களை எடுத்து எரியும் அடுப்பில் போட்டு விட்டாள் அது எரிந்து சாம்பலாகியது. தன் சொல்லையும் மீறி தன்னை மதிக்காது தனது பத்திரங்களை எரித்தபோது அவன் அளவிலாக் கோபம் கொண்டான். அருகில் இருந்த உலக்கையை எடுத்துக் கலாவின் தலையில் ஓங்கி அடித்தான்.

மண்டை உடைந்து அதிர்ச்சியினால் மயங்கி விழுந்தாள். பிள்ளைகள் இருவரும் வீறிட்டு அழுதனர். மனைவியைக் கொலைசெய்துவிட்டேன் என்ற பயத்தில் நடுங்கியவாறு பிள்ளைகள் சத்தம் கேட்டு அயலவர் கூடிவிடாது தடுக்கப் பிள்ளைகளின் வாயைப் பொத்தி அழுத்தினான். மூச்சுத் திணறி ரமேஷ், உமா இருவரும் மயக்கமடைந்தனர். 5 நிமிடங்களின் பின் மனைவியின் பிரேதத்தை மறைக்கும் முகமாக பிள்ளைகளை விட்டபோது இருவரும் பொத்தென விழுந்தனர்.

அவர்களும் இறந்து விட்டார்களென எண்ணி மூவரையும் ஒரு சாக்கில் போட்டுக் கட்டி வீட்டின் பின்னால் சிறிது தூரத்தில் பாய்த்தோடும் ஆற்றில் எறிகின்றான். சாக்கு பாறையொன்றில் மோதி மண்டை பிளந்து சிதறி மூவரும் மரணமடைகின்றனர். வைத்திய பரிசோதனையில் அவன் தாக்கியபோது இறக்கவில்லை என்றும் கடலில் எறியும் போதே இறந்தார்கள் என்று தெரிய வருகிறது.

ரஞ்சன் கொலைக் குற்றம் சாட்டப்படுகிறான்.

நீங்கள் நீதிபதி ஸ்தானத்தில் இருந்தால்...

★ பதில் எழுதியவர்

அ. இ. ஸ்ரான்லி

இவருக்கு எமது பாராட்டுக்கள்

— ஆசிரியர்.

சட்டத்தின் பிரதான குறிக்கோள் ஆயிரம் குற்றவாளிகள் விடுதலையாகலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டனை அடையக் கூடாது என்பதுதான். இதில் குற்றமனம் முக்கியம் பெறுகிறது. கொலையைக் கருதிச் செய்வதற்கும், வெறுமனே காயம் விளைவிப்பதற்கும் உள்ள இடைவெளி வித்தியாசமானது. உயிருக்கு ஏற்படக்கூடிய அபாயம் குற்றமனதின் அளவைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும். இலங்கைச் சட்டத்தில் இது கொள்கை அளவில் மட்டுமன்றி நியதிச் சட்டங்களிலும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. தண்டனைச் சட்டக் கோவையிலும் அதற்கேற்ப வாசகங்களைப் பயன்படுத்தியுள்ளது. MALICIOUSLY KNOWINGLY WILULLY ILLEGALLY UNLAWFULLY DISHONESTLY WRONGFULLY ஆகிய வாசகங்கள் குறிப்பிடத் தக்கன.

இவ்வாறாக குற்ற மனதின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு

இருப்பதால் சூழ்நிலைக்கேற்றபடி ஒவ்வொரு வழக்கையும் ஆராய்வதற்கு முடிகிறது. குறிப்பிட்ட இவ்வழக்கின் நிகழ்வுகளை ஆராயுமிடத்து ரஞ்சனுக்குச் சம்பவம் நடைபெறுவதற்கு முன்போ பின்போ கொலை செய்யும் நோக்கம் இருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மனைவி கலாவின் செய்கையால் வெளிநாடு செல்லவிருந்த அவன் ஆசை நிராசையாகி விட்டதால் ஏற்பட்ட ஆத்திரம் அவனையுமறியாது செயல் செய்யத் தூண்டியது. பிள்ளைகள் விடயத்திலும் கொலை செய்யும் நோக்கம் ரஞ்சனுக்கு இருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. வைத்தியப் பரிசோதனையின்படி அவன் தாக்கியபோது இறக்கவில்லை என்பதும், கடலில் எறியும்போதே இறந்தார்கள் என்பதும் தெரிகிறது. அவ்விதம் செய்யும்போது — குற்றமனம் இருந்ததா என்பதே நிலைநாட்டப்பட வேண்டியதாகும். திடீர் கோபத்தினால் ஏற்பட்ட ஒரு குற்றத்தை மறைக்கப் பல குற்றங்களைச் செய்திருப்பது தெரிகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய நிலைமைக்கு எப்போதும் தணிக்கும் பாதுகாப்பும் அவசியமாகும். தண்டனைச் சட்டக்கோவை 294-ல் உள்ள விதிவிலக்குகளில் ஆட்கொலை அல்லாத கொலைக்கு உட்படுத்தக்கூடிய தணிக்கும் பாதுகாப்புகளில் திடீரென ஏற்படக்கூடிய கோபத்தால் வரும் விளைவுகளுக்குப் பரிகாரம் சொல்லப்படுகிறது. அந்த நிலையின் கீழ் இந்த நிகழ்வுக்குத் தணிக்கும் பாதுகாப்பு பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

அப்படியானால் எல்லாக் கோபங்களுக்கும் தணிக்கும் பாதுகாப்பு உண்டா என்று பார்ப்போமாயின் நியாயமான மனிதன் (REASONABLE MAN) எப்படி நடந்து கொண்டிருப்பான் என்ற அளவுகோல் மூலம் மதிப்பிடலாம் என்பதும் தெரிகிறது. அது மட்டுமன்றி எப்படித் தன் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது போயிற்று என்பதற்குச் சரியான விளக்கம் செய்து நிரூபிக்க வேண்டும் என்பதை K O J PERERA வழக்கில் நீதியரசர் நாகலிங்கம் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

மேற்கூறிய வழக்கின் நிகழ்வுகள் இதற்குப் பொருத்தமான சிந்தனையைத் தரும். பிரபுக்கள் சபையினால் மாற்றப்பட்ட இத்தீர்ப்பின் விபரம் பின்வருமாறு: காலஞ்சென்றவருடைய குடும்பத்தாருக்கும் குற்றம் சாட்டப்பட்டவருடைய குடும்பத்தாருக்கும் இடையே நீண்ட காலமாக மனஸ்தாபம் இருந்தது. தொடர்ச்சியான பயமுறுத்தலும், இடைவிடாத கல்வீச்சும் இறந்தவருடைய குடும்பத்தாரினால் மேற்கொள்ளபப்பட்டதால் சினமுற்ற குற்றவாளி பிரச்சினைக்குரிய தினத்தில் சுட்டுக் கொலை செய்தார். இது தணிக்கும் பாதுகாப்பைப் பெறுமா என்பது ஆராயப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவரின் உயிருக்குக் கடுமையான ஆபத்து ஏற்படக் கூடிய வகையில் சூழ்நிலை அமைத்திருந்ததால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாது போயிற்று என்று விளக்கம் சொன்னார். ஆட்கொலை அல்லாத கொலைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டார்.

BATCHO என்ற வழக்கிலும் குற்றம் சாட்டப்பட்டவர் தன்னை மணமுடிக்க இருந்த பெண் நடந்து கொண்ட முறையை விபரித்தார். தேநீர்க் கோப்பையை எறிந்து அவமானப்படுத்தியதுடன் கதைக்க முற்பட்டபோது சூடாக்கப்பட்ட இரும்பினால் சுடவும் முற்பட்டார். அரசாங்க தரப்பு இதற்கு மாறாக இவைகள் யாவும் இவர் அனுப்பிய குற்றமிழைக்கத் தூண்டக்கூடிய கடிதமே என்று வாதிட்டது. கடிதத்தையும் சமர்ப்பித்தது. இங்கு தணிக்கும் பாதுகாப்புப் பெறமுடியுமா என்ற வினா எழுப்பப்பட்டது. நிரூபணப் பொறுப்பு எதிரியைச் சார்ந்திருந்தது.

ஆனால் எமது வழக்கின் நிகழ்வுகளின்படி குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர் உண்மையில் கடுங்கோபம் ஏற்படக் கூடிய நிலையில் ஒரு 'நியாயமான மனிதன் என்ற தன்மையின் கீழ் ஆராயும் வாய்ப்பினைப் பெறுகிறார்.

கடுங்கோபம் என்ற நிலையை அணுகும்போது கோபம் எத்தகையதாக இருந்தது? அது சாதாரண மனிதன் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றா? என்பதற்குத் திட்டவட்டமான வரைவிலக்கணம் இல்லை. சூழ்நிலைக்கேற்றபடி நீதிமன்றம் இதனைத் தீர்மானிக்கும்.

DAVID APPUHAMY வழக்கில் கடுங்கோபம் பற்றிய சட்டநிலை தெளிவாக்கப் பட்டது. அதன் அடிப்படைக் கோட்பாட்டின்படியும், தண்டனைச் சட்டக்கோவை நியதியின்படி பார்க்கும் போதும் குற்றப் பொறுப்புக் குற்ற மனதைக் கொண்டு தீர்மானிக்கப்படும் என்பது தெளிவாகிறது. குற்றத்துக்குப் பொறுப்பு இல்லாதவிடத்து குற்றவாளி நிரபராதியாகின்றான்.

X இற்கு சுடப்படவிருந்த குண்டு Yக்குப் பட்டு Y இறந்தால் சுடப்பட்டவர் குற்றமனம் தனக்கு Y யிடம் இருந்தது இல்லை என்று சொல்லி வாதிட முடியாது. கொலை செய்யும் குற்றமனம் இருந்ததாகவே கொள்ளப்படும்.

இவ்வாறாக குற்றமனதின் எல்லை குற்றப் பொறுப்பின் அளவை மதிப்பிடுவதோடு நியாயமானதாகவும் நீதியானதாகவும் விளங்க வேண்டும். இதற்குச் சில விதிவிலக்கான நடைமுறைகள் பகரப் பொறுப்பிலும், கடும் பொறுப்பிலும் காணப்படுவதினால் சில நிரபராதிகள் கூடத் தண்டிக்கப்பட வாய்ப்பேற்படுகிறது. அது சட்டத்தின் சில விதிநடைமுறைகளைப் பாதுகாக்க வேண்டியிருப்பதால் அவ்விதம் ஏற்படுகிறது. பொதுவாகக் குற்றமனம் சட்டத்தில் குற்றப் பொறும்பை நிர்ணயிக்கும் அளவுகோலாக மதிப்பிடப்படுகிறது.

அந்த வகையில் இந்த நிகழ்வுகளின்படி ரஞ்சன் வேண்டுமென்றே யாரையும் கருதிக் கொலை செய்யும் எண்ணம் கொண்டிருக்கவில்லை. சடுதியாக ஏற்பட்ட கோபம் ஒரு குற்றத்தைச் செய்யத் தூண்டியது. அதற்காக அவனை முழுமையான கொலைக் குற்றவாளியாகக் கருதிவிடக் கூடாது. உடலைச் சாக்கிற் போட்டுக் கட்டி எறிய முற்பட்ட செய்கை தவறானதே. ஆயினும் கூட தண்டனைச் சட்டக் கோவை 294-ன் ஐந்து விதிவிலக்குகளின் தணிக்கும் பாதுகாப்பின் கீழ் ஆட்கொலையல்லாத கொலைக்கு ரஞ்சனைக் குற்றவாளியாகக் காண முடிகிறது.

ஆகவே ரஞ்சனுக்கு ஆட்கொலையல்லாத கொலைக்கு (CULPABLE HOMiCIDE NOT AMOUNTiNG MURDER) குற்றவாளி எனக்கண்டு தீர்ப்பளிக்கிறேன்.

# உழைப்போர் வாழ்க்கை

❁ ஈழக்குயில் இத்திரீஸ்

மலைபோல் உயர்ந்த உழைப்பு
மனமோ நொந்த சலிப்பு
அலைபோல் பாயும் வியர்வை
அற்றதோ ஏழையின் வாழ்க்கை
உண்றிடப் பாணும் இல்லை
உடுத்திடத் துணியும் இல்லை
மண்டை வெடித்திடும் வெய்யோன்
கொதியில் உழைக்கும் நிலைமை
படிப்பதோ உயர்ந்த படிப்பு
படைப்பதோ பெரிய சட்டம்
துடிப்பதோ பசியில் உழைப்போர்
துன்பமே எம்மவர் தோழன்
உண்போருக்கு வளரும் மதிப்பு
உழைப்போருக்கு அணுவும் இல்லை
கண்ணீரோ ஏழைகள் குடிநீர்
எம்மவர் வாழ்க்கை விரக்தி
படுக்கவோ பஞ்சணை மெத்தை
நடக்கவோ காலுக்கு செருப்பு
உடுக்கவோ உயர்ந்த சீலை
உழைத்திடா சோம்பலர் வாழ்க்கை
நடிப்பினில் உலகினை விரட்டி
உழைப்போரைச் சாறாய்ப் பிளிந்து
குடித்திடும் பணக்கார மூட்டை
ஒழிந்தாலே எமக்கு வாழ்வு. ●

# தீர்ப்புக்கூற முடியுமா?

ரஜனியின் காரைத் தொழிலதிபரான பத்மனாதன் தனது மகள் சுதாவின் திருமணத் தேவைக்கு மேலதிகமாகப் பயன்படுத்த விரும்பி 8 ஸ்ரீ தொடர்பிலக்க பென்ஸ் காரையும் அவரது றைவரையும் வாங்கினார். சுதா திருமணம் முடித்து இரண்டாவது நாள் சுதாவின் அண்ணார் சுந்தரும், அவனது நண்பர்கள் இருவரும் றைவருடன் கொழும்பு றெஸ்ரோறன்றிற்குச் சென்று மது அருந்தினர். பின்னர் கஸ்தூரியார் 'வீதி வழியாக சுந்தரே காரைச் செலுத்தினான். சிறிது போதையில் இருந்தமையால் காரை வேகமாகச் செலுத்தினான். பைலட் பிரேம்நாத் படம் திரையிடப்பட்டிருந்ததால் வின்ஸர் அரங்கு முன்பு மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டிருந்தனர். காரை பிரேக் போட அவனது போதை இடங்கொடுக்கவில்லை. ஹாரனைப் பலமாக அடித்து காரைப் படுவேகத்திற் செலுத்தினான். அவ்வேளை மக்கள் ஒதுங்க முற்பட்டும் முடியவில்லை காரில் அடிபட்டு மூவர் அவ்விடத்திலேயே இறந்தனர். இருபதுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். நிலை குலைந்த சுந்தர் காரை நிறுத்தாது வேகமாகச் சென்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்துக்கருகில் நிறுத்திவிட்டு சுந்தரும் அவனது நண்பர்களும் தப்பியோடி விட்டனர்.

[26-ம் பக்கம் பார்க்க]

# வடக்கு கிழக்கின் பொருளாதார வளம்

## வடக்கு கிழக்கு இலங்கையின் நீர்வளங்கள்
## ஒரு சிறு மதிப்பீடு

எஸ் .குமரகுரு B . A (CEY)

தன்னை ஒரு விவசாய நாடு என்று கூறிக் கொண்டு ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் இலங்கையின் வடக்கு — கிழக்குப் பகுதிகள் சமூக ரீதியிலும் சரி, பொருளாதார ரீதியிலும் சரி தனித்துவமாக காட்சி அளிக்கின்றன. குறிப்பாக வெங்காயம், மிளகாய் ஆகிய உப - உணவுப் பயிர்ச் செய்கையின் விளைவுகள் மூலம் முழு இலங்கைக்கும் தன்னிறைவு பெற்றுக் கொடுக்க முடியும் என்ற சவாலில் வெற்றி அடைந்துள்ள விவசாயப் பிரதேசங்களாக இவை விளங்குகின்றன. ஆகவே விவசாயத் துறையிலும் சரி, கடற்றொழில் துறையிலும் சரி, கைத்தொழில் துறையிலும் சரி ஏனைய எவ்வகைத் துறைகளை எடுத்துக் கொண்டாலும் சரி, போதிய ஊக்கமுள்ள – கடின உழைப்புள்ள - தொழிற்திறனுள்ள தொழில் வல்லுனர்களை, விவசாயிகளை அளித்துவரும் இப்பிரதேசங்கள் முக்கியத்துவம் பெறுவதில் வியப்பில்லை. ஆனால் அரசியற் கொள்கைகளின் காரணமாக, அப்பிரதேசங்களின் முழு வளங்களும், பூரண ஆய்வுக்குட்படாது, பயன் படுத்தப்படாது இருப்பதும் மேலோட்டமாக நடைபெறும் ஆய்வுகள் பேப்பர் (PAPER) திட்டங்களாகவே அமுல்நடத்தப்படுவதும் துரதிஸ்ட வசமானதே எனினும் இவ்வாறான சூழ்நிலையில் அகப்பட்டிருக்கும் இப்பிரதேசங்கள் தங்கள் தொழிற்திறனையும், தமது தற்போதைய குறைவுற்ற பொருளாதாரத்தையும் கொண்டு, தம் சுய நம்பிக்கையின் அடிப்படையில் விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதே தற்போது முன் வைக்கப்படும் ஒரு பொதுக் கோட்பாடாக உள்ளது. எனவேதான், இப்பிரதேசங்களின் வளங்கள் பற்றிய ஆய்வில் நீர்வளத்தின் பங்கும் அதன் மாற்றம் பற்றியும் ஒரு சிறு மதிப்பீடாக இக்கட்டுரை எழுதப்படுகிறது.

இங்கு வடக்கு-கிழக்கு இலங்கை என்று குறிப்பிடப்படுவது வடக்கு, கிழக்கு மாகாணங்களையே என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசங்களின் அமைப்பு, தரைத்தோற்றம், காலநிலை ஆகிய வற்றை பொதுவாக நோக்குமிடத்து, 7269 சமைல் பரப்பளவைக் கொண்டு, தாழ்நிலப்பகுதிக்குள் காணப்பட்டாலும், உயர்ந்த வெப்பநிலை, குறைவான மழைவீழ்ச்சி, (அதுவும் பருவ மழைவீழ்ச்சியாக இருப்பது) கோடைகாலத்தையே அதிகமாக கொண்டிருப்பதன் காரணமாக தொடர்ந்து உலர் வலயத்தின் ஒரு பகுதியாக விளங்கிவருவதால், அதற்குரிய உலர் வலயக் காலநிலைக்குரிய சிறப்பம்சங்களையே கொண்டிருக்கின்றது. எனவே அப்பிரதேசங்களுக்குக் கிடைக்கும் மழைவீழ்ச்சியானது வடகீழ் பருவக்காற்றினாலும், சூருவளிகளினாலும் என்பதனால் போதிய நீர்வளம் பெற முடியாது என்பதும் தெளிவு, இருந்தபோதும் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் ஒரு பகுதி தரைகீழ் செல்வதாலும், பெரும் பகுதி சுண்ணற்கற்படிவுகளை கொண்டிருப்பதாலும், இப்பிரதேசத்தின் வட, வடமேற்குப் பகுதிகள் கணிசமானளவு நீர் வளத்தினைக் கொண்டிருப்பதுடன், நீர்ப்பாசனத்துக்கும் ஏனைய சமூக தேவைகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

மேலும், இத் தரைகீழ் நீர்பற்றி சற்று, ஆழமாக நோக்குமிடத்து இப்பிராந்தியத்தில் நிலத்துக்கடியில் நீரைத்தாங்கி வைத்திருக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்த சுண்ணாம்புக் கற்படிவுகள் இருப்பதன் காரணமாக ஆதிகாலம் தொட்டு, அதாவது சுண்ணாம்புக்கற்பாறைக்குரிய மயோசின் யுகத்திலிருந்து, மேல் வாய் கிணறுகள் மூலமாகவும், மனித சக்தியாலும் வேறும் பல வழிகளினாலும் இந்நீர் நீர்ப்பாசனத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் அண்மைக் காலத்திலிருந்து நீரிறைக்கும் இயந்திரங்கள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. எனவேதான், அதிகளவான நீர்

வெளியேற்றம் காரணமாக தரைகீழ் நீர் ஊற்றுக்கு அபாயம் ஏற்படுவதாக அச்சம் தெரிவிக்கப்பட்ட போதும் அண்மைக்கால சில ஆய்வுகள் சிறு நம்பிக்கை தெரிவித்துள்ளன. அதாவது 1964ல் கொண்டச்சியிலும் (மன்னாருக்குத் தெற்கே) வண்ணாத்திவில்லிலும் (புத்தளத்துக்கு வடக்கே) தோண்டப்பட்ட ஆழமான குழாய் கிணறுகள் மூலம் கிடைத்த முடிவுகளின்படி நீர்ப்பாசனத்துக்குத் தேவையான நீரைச் சிக்கனமான முறையில் பெற போதுமானஅளவிற்கு தரைகீழ் சுண்ணக்கற்படிவில் நீர் இருப்பு காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மகாவலி அபிவிருத்தித்திட்டம் நிறைவேறும் பட்சத்தில் அப்பிராந்தியத்திலுள்ள மேற்பரப்பு நீர் இரட்டிக்கப்படக் கூடிய சூழ்நிலை இருப்பதன் காரணமாக நிலத்துக்கடி நீருக்கு நன்மை ஏற்படலாம். எனவேதான் எதிர்காலத்திலும் அச்சம் கொள்ளாது எமது நீர்ப்பாசனத்துக்கு ஒரு குறிப்பிடத்தக்க வளமாக தரைகீழ் நீர் அமையுமென கருதிக்கொள்ளலாம். ஆகவே இத்தகைய ஒரு அடிப்படையிலிருந்தே மழைவீழ்ச்சியிலிருந்து பெறப்படும் நீரைச் சேகரிக்க வேண்டியதன் அவசியமும், நீர்வளங்களை உருவாக்கி, அவற்றைப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதொரு கடமையும் பிறக்கிறது எனலாம்.

ஆகவேதான் பண்டைய மன்னர்களால் பயன்படுத்தப்பட்டு, தற்போதைய நிலையில் தூர்ந்து அழிந்து போகும் நிலையிலிருக்கும் குளங்கள், நீர்த்தேக்கங்கள், வாவிகள் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாப்பது நமது கடமையாகும். அத்துடன் நதிகளின்மீது அணைக்கட்டுக்கள் கட்டி நீர்த்தேக்கங்களை அமைத்து மழைவீழ்ச்சிக் காலங்களில் நீரினை வீணாக்காது தேக்கிக் கொள்ள வேண்டும் அத்துடன் புதிய குளங்கள், நீர்த்தேக்கங்களையும் அமைத்து மழைநீரினை தேக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் எமது முயற்சியின் மூலமும் தன்நம்பிக்கையின் மூலமும் மழை நீரைப் பயன்படுத்த தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து நாம் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள நீர்வளங்களின் பரம்பல், செறிவு பற்றி நோக்குமிடத்து கிழக்கு மாகாணத்தில் அதிகளவு நதிகளும், குளங்களும், வாவிகளும் அமைந்திருக்கும் அதே நேரத்தில் வடக்கு மாகாணத்தில் அவற்றின் பரம்பல் மிகவும் குறைவாகவே இருக்கின்றதனை அவதானிக்கலாம். அத்துடன் மகாவலி தவிர்ந்த ஏனைய நதிகளில் பெரும்பாலானவை மழைவீழ்ச்சிக் காலத்தில் மட்டுமே நீரினைக் கொண்டு விளங்குகின்றன. வடக்கு மாகாணத்திலுள்ள நதிகளில் பிரதானமானவை கனகராயன் ஆறு, பறங்கியாறு: நெத்தலி ஆறு, அருவி ஆறு ஆகியவை இவையாவும் கோடை காலத்தில் வற்றிப்போகக் கூடியது இதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் யான்ஓயா, மகாவலி கங்கை மதுறு ஓயா, கல்ஓயா, கும்புக்கன்ஓயா, ஹெட ஓயா, முந்தெனி ஆறு ஆகியவற்றைக் குறிப்பிடலாம் எனவே இத்தகைய ஆறுகள் மீது அணைக்கட்டுகளை அமைத்ததன் மூலமே அன்றி நீர்த்தேக்கங்கள் அமைத்து நீரைத் தேக்குவதன் மூலமே முழுமையான பயனைப் பெற்றுக்கொள்வதுடன் வீணாகி விரயமாகும் நீரினையும் சேமித்துக் கொள்ளலாம். ஆனால் மகாவலி, மதுறுஓயா, ஆகியன பாரிய அளவில் நீர்ப்பாசனத் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும், இவற்றினால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் எவ்வளவு தூரம் பயன்பெற முடியுமென்பதை காலம்தான் பதில்சொல்ல வேண்டும். ஆகவே நாம் இயற்கை அன்னை எமக்களித்த இலவசமான வளங்களில் ஒன்றாகிய நீர்வளத்தை பேணிப் பாதுகாத்தும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வடக்கு கிழக்கு இலங்கையின் மாவட்ட ரீதியில் அமைந்துள்ள நீர்வளங்களின் பரம்பல்.

| பெயர் | மொத்த கொள்வளவு ஏக் அடி | நீர்பாயச்சக்கூடிய பகுதி ஏக். | தொகுதி |
|---|---|---|---|
| 1 அம்பலன் ஓய குளம் | 35 000 | 3 600 | அம்பாறை |
| 2 டிவுலனைக் குளம் | 2344 | 1647 | ,, |
| 3 எக்கல் ஆறு குளம் | 21 500 | 2020 | ,, |
| 4 இறக்கமம் குளம் | 15 666 | | பொத்துவில் |

| பெயர் | மொத்த கொள்வளவு ஏக். அடி. | நீர்ப்பாய்ச்சக்கூடிய பகுதி ஏக். | தொகுதி |
|---|---|---|---|
| 5 நமல் ஓயா குளம் | 37 000 | 4620 | அம்பாறை |
| 6 நவகிரி ஆறு நீர்த்தேக்கம் | 42 500 | 15 000 | ,, |
| 7 பன்னலகம நீர்த் தேக்கம் | 22 200 | 3600 | பொத்துவில் |
| 8 பல்லன் ஓயாக் குளம் | 93 000 | 5660 | அம்பாறை |
| 9 சக்கமக் குளம் | 6250 | 2738 | ,, |
| 10 றவ்வஸ் குளம் | 2766 | 1020 | ,, |
| 11 சென நாயக்க சமுத்திரம் | 770 000 | 82 475 இடதுகரை | அம்பாறை |
| ,, ,, | ,, | 40 000 வலதுகரை | பட்டிருப்பு |

## சிறிய நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 அந்தெல்லே ஓயாக் குளம் | 2140 | | அம்பாறை |
| 2 அம்பாறைக் குளம் | 7250 | | ,, |
| 3 அலிக்கலகே குளம் | 2150 | | ,, |
| 4 அளேச்சேனே குளம் | 1770 | | ,, |
| 5 பலகெல்லே குளம் | 6200 | | ,, |
| 6 சடையன்தலாவ குளம் | 3207 | | பொத்துவில் |
| 7 தொடன்கொட குளம் | 364 | | ,, |
| 8 கிமிதுறவா குளம் | 6 000 | | ,, |
| 9 இலுக்கைச்சேனைக் குளம் | 1 234 | | ,, |
| 10 கொண்டைவைச்சான் குளம் | 9113 | | அம்பாறை |
| 11 குமணைக் குளம் | 1725 | 114 | பொத்துவில் |
| 12 லுகுகல குளம் | 2670 | 451 | ,, |
| 13 மலையடிக் குளம் | 7300 | | அம்பாறை |
| 14 நாவுலக் குளம் | 922 | 255 | பொத்துவில் |
| 15 கீதைக் குளம் | 599 | | நிந்தாவூர் |
| 16 பனிநம்மக் குளம் | 2421 | 434 | பொத்துவில் |
| 17 றெகடல்லேக் குளம் | 1643 | 584 | ,, |
| 18 றெட்டைக் குளம் | 4470 | 788 | ,, |
| 19 வம்மியடிக் குளம் | 1128 | 180 | ,, |
| 20 வலத்திபிட்டிக் குளம் | 2070 | | ,, |
| 21 விரகொடைக் குளம் | 1250 | | அம்பாறை |

## மட்டக்களப்பு மாவட்டம் -- பிரதானமான நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 கட்டுக்கருணைக் குளம் | 5026 | 2744 | பட்டிருப்பு |
| 2 புளுகணுவக் குளம் | 1875 | 4222 | ,, |
| 3 றூகம் குளம் | 18 835 | 8162 | மட்டக்களப்பு |
| 4 உன்னிச்சைக் குளம் | 38 330 | 9247 | ,, |
| 5 வாகனேரிக் குளம் | 121 000 | 7680 | கல்குடா |

# மாணவர் கவனத்திற்கு!

எம்மிடம் தற்போது பின்வரும் கட்டுரைகளைத் தாங்கிய 'செவ்வந்தி' இதழ்களே விற்பனைக்குள்ளன. ஏனைய கட்டுரைகள் அடங்கிய செவ்வந்தி யாவும் முடிந்து விட்டன. சொற்ப பிரதிகளே விற்பனைக்குள்ளன. பெற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

பொருளியல்
- ★ அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் நாணய மதிப்பு இறக்கமும்
- ★ இலங்கையின் உள்நாட்டு விவசாயத் துறையும் பொருளாதார அபிவிருத்தியும்
- ★ சென்மதி நிலுவையில் பிரச்சனை ஏற்படுவதற்கான காரணங்களும் அதனைத் தீர்ப்பதற்கு கையாளப்படும் வழிகளும்
- ★ நாணயப் பெறுமதி இறக்கமும் சென்மதி நிலுவைப் பிரச்சனையும்
- ★ பல்தேசியக் கம்பனிகள்
- ★ இலங்கையின் கிராமியப் பொருளாதாரமும், அது எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்
- ★ சுதந்திர வர்த்தக வலயம் — சில பிரச்சனைகள்
- ★ தனியார்துறை இயங்கும் நாடுகளில் அரசாங்க நடவடிக்கையின் அவசியம்

புவியியல்
- ★ சனத்தொகையும், அதன் விளைவுகளும்
- ★ நேருருவெறிய விளக்கத்திற்கு நான்கு படங்கள்
- ★ இலக்கியமும், பண்பாடும்
- ★ இலங்கையின் மீன்வளம்
- ★ உற்பத்திக் கைத்தொழில் நிலையங்களின் நிர்ணயிப்புக் காரணிகள்
- ★ இலங்கையில் வளர்ந்த கட்டடக் கலைப் பண்பாட்டின் தோற்றம்
- ★ சனத்தொகையும், அதன் விளைவுகளும்

இலக்கியம்
- ★ 20-ம் நூற்றுண்டுத் தமிழ் இலக்கியம்
- ★ தமிழியல் வளர்ச்சியின் முன்னோடி 'சுவாமி விபுலானந்தர்'
- ★ பாரதியின் 'கண்ணன் பாட்டு'
- ★ ஆரம்பகாலத் தமிழ் நாவலாசிரியர்களின் குறிக்கோள்
- ★ தமிழில் பக்தி இயக்கம்
- ★ பல்லவர் கால இலக்கிய நெறியும் சோழர் கால இலக்கியப் போக்கும்

இவ் வேறுபட்ட கட்டுரைகள், தனித்தனி இதழ்களில் அல்லாது புவியியல் — சட்டம் இலக்கியம் — பொருளியல் கட்டுரைகள் ஒரே இதழில் எழுதப்பட்டுள்ளன

உங்களுக்குத் தேவையான 'கட்டுரைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு' எழுதவும் இவை வி. பி. பி யில் மட்டுமே அனுப்பி வைக்கப்படும். பிரதி ஒன்றின் விலை ஒரு ரூபா மட்டுமே.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;-

**'நிர்வாகி' செவ்வந்தி கலைக்கூடம்**

*185—4, கில்னர் லேன், — யாழ்ப்பாணம்.*

| பெயர் | மொத்த கொள்ளளவு ஏக். அடி. | நீர்ப்பாய்ச்சக்கூடிய பகுதி ஏக். | தொகுதி |
|---|---|---|---|

## சிறிய நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 அடைச்சல் குளம் | 511 | 200 | மட்டக்களப்பு |
| 2 அன்னை சுட்ட கட்டுக் குளம் | 932 | 300 | கல்குடா |
| 3 ஹெனகல் கண்டிய குளம் | 4655 | 603 | அம்பாறை |
| 4 கட்டுமுறிப்புக் குளம் | 4256 | 216 | கல்குடா |
| 5 கரந்தா கெலேக் குளம் | 700 | 233 | பொத்துவில் |
| 6 கஞ்சன் கல்லுக் குளம் | 685 | 225 | கல்குடா |
| 7 கிரிமச்சைக்குளம் | 1256 | 256 | ,, |
| 8 கிதுள்வாவி | 4,081 | 318 | மட்டக்களப்பு |
| 9 மகாஓயாக்குளம் | 253 | 86 | அம்பாறை |
| 10 மருதன்கேணிக்குளம் | 2150 | 402 | கல்குடா |
| 11 புல்லுமலேக்குளம் | 275 | 133 | மட்டக்களப்பு |
| 12 தெம்பிட்டியகுளம் | 1,263 | 327 | அம்பாறை |
| 13 தரவைக்குளம் | 367 | 200 | கல்குடா |
| 14 தம்பன்கேணிக்குளம் | 691 | 672 | பட்டிருப்பு |
| 15 வடமுனைவாவி | 3856 | 398 | கல்குடா |
| 16 வெலிகஹண்டியக்குளம் | 1,700 | 222 | அம்பாறை |

## திருகோணமலே மாவட்டம் - பிரதான நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 அல்லேக்குளம் | 8,400 | 12,413 | மூதூர் |
| 2 கந்தளாய்க்குளம் | 109,500 | 5,850 | ,, |
| 3 மோறவாவி | 31,000 | 4,100 | ,, |
| 4 வேந்தரசன்குளம் | 20,200 | 1,161 | ,, |

## சிறிய நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 அந்தன்குளம் | 1,780 | 429 | மூதூர் |
| 2 ஷலமன்குளம் | 400 | 300 | திருகோணமலே |
| 3 எத்தண்டமுறிப்புக்குளம் | 570 | 200 | ,, |
| 4 ஹல்மெட்டியவகுளம் | 7,700 | 615 | மூதூர் |
| 5 ஹொாமனகத்தவல்லேக்குளம் | 1,806 | 600 | திருகோணமலே |
| 6 எல்லகந்தைக்குளம் | 600 | 125 | ,, |
| 7 நீலபறிக்கன்குளம் | 734 | 209 | மூதூர் |
| 8 பன்மடவச்சியகுளம் | 256 | 110 | திருகோணமலே |
| 9 பெரியகுளம் | 1550 | 268 | மூதூர் |
| 10 பெரியஎலும்புருக்கிக்குளம் | 613 | 200 | திருகோணமலே |

| பெயர் | மொத்த கொள்ளளவு ஏக் அடி | நீர்பாய்ச்சக்கூடிய பகுதி ஏக். | தொகுதி |
|---|---|---|---|

## வவுனியா மாவட்டம் -- பிரதானமான நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 பாவற்குளம் | 270,000 | 3,758 | வவுனியா |
| 2 பெரியகுளம் | 602 | 1,919 | ,, |
| 3 கண்ணுக்கேணிக்குளம் | 2,100 | 1,208 | ,, |
| 4 முத்துஐயன்கட்டுக்குளம் | 41 000 | 6,000 | ,, |
| 5 தண்ணிமுறிப்புக்குளம் | 15,000 | 2,364 | ,, |
| 6 உடையார்கட்டுக்குளம் | 6,505 | 1,200 | ,, |

## சிறிய நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 ஆராச்சிமுறிப்புக்குளம் | 245 | 167 | வவுனியா |
| 2 செம்மடுக்குளம் | 2,003 | 600 | ,, |
| 3 இறப்பெரியகுளம் | 3,534 | 512 | ,, |
| 4 கனகராயன்குளம் | 914 | 232 | ,, |
| 5 கஞ்சுரமோட்டைக்குளம் | 145 | 75 | ,, |
| 6 கல்மடுக்குளம் | 1,206 | 404 | ,, |
| 7 கோடாலிக்காலுக்குளம் | 175 | 133 | ,, |
| 8 இடைக்காடுக்குளம் | 508 | 156 | ,, |
| 9 மடுக்கண்டகுளம் | 1,400 | 399 | ,, |
| 10 மகாஇறம்பைக்குளம் | 643 | 215 | ,, |
| 11 மாமடுவக்குளம் | 3,030 | 655 | ,, |
| 12 மனியர்குளம் | 698 | 150 | ,, |
| 13 மருதமடுக்குளம் | 1,500 | 400 | மதவாச்சி |
| 14 மதஉத்தக்குளம் | 832 | 80 | வவுனியா |
| 15 முகட்டன்குளம் | 2,400 | 652 | ,, |
| 16 நிலவிக்குளம் | 87 | 75 | ,, |
| 17 பெரியகுளம் | 602 | 206 | ,, |
| 18 பெரியதம்பைக்குளம் | 1095 | 379 | ,, |
| 19 துவரைமோட்டைக்குளம் | 53 | 18 | ,, |
| 20 வவுனியாக்குளம் | 1,900 | 424 | ,, |
| 21 வெங்கலச்செட்டிகுளம் | 690 | 131 | ,, |

## மன்னார் மாவட்டம் - பிரதான நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 கட்டுக்கரைக்குளம் | 31,250 | 15,074 | மன்னார் |
| 2 வவுனிக்குளம் | 35,300 | 6,000 | மன்னார், கிளிநொச்சி |

## சிறிய நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 அகத்திமுறிப்புக்குளம் | 1,568 | 551 | மன்னார் |
| 2 சிரட்டிக்குளம் | 327 | 111 | ,, |

| பெயர் | மொத்த கொள்வளவு ஏக். அடி | நீர்ப்பாய்ச்சக்கூடிய பகுதி ஏக். | தொகுதி |
|---|---|---|---|
| 3 குறைக்குளம் | 1,598 | 284 | மன்னார் |
| 4 முள்ளிக்குளம் | 1,500 | 375 | ,, |
| 5 பெரியமடுக்குளம் | 4,478 | 750 | ,, |
| 6 பெரியபன்றிவிரிச்சான்குளம் | 2,816 | 606 | ,, |
| 7 பிடச்சேனை மருதமடுக்குளம் | 580 | 137 | ,, |

## யாழ்ப்பாண மாவட்டம் – பிரதான நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 அக்கராயன்குளம் | 21,300 | 3,006 | கிளிநொச்சி |
| 2 ஹரியாலை நாகபண்டுவன்குளம் | 7,700 | 1,021 | ,, |
| 3 இரணைமடுக்குளம் | 82,000 | 18,264 | ,, |

## சிறிய நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 அம்பலப்பெருமாள்குளம் | 3,061 | 600 | கிளிநொச்சி |
| 2 கல்மடுக்குளம் | 9,152 | 450 | ,, |
| 3 கோட்டைகட்டினகுளம் | 1882 | 400 | ,, |
| 4 கோத்தன்வில்லன்குளம் | 782 | 240 | ,, |
| 5 கனகாம்பிகைக்குளம் | 790 | 260 | ,, |
| 6 மாவிகண்டிக்குளம் | 1780 | 356 | ,, |
| 7 புதுமுறிப்புக்குளம் | 2908 | 985 | ,, |
| 8 தெணியன்குளம் | 4400 | 850 | ,, |
| 9 வன்னேரிக்குளம் | 1713 | 344 | ,, |
| 10 விசுவமடுக்குளம் | 2990 | 386 | ,, |

★ மூலம்: **Register of Irrigation Projects in Sri Lanka 1975**

இடைவெளி விடப்பட்டவை ஆய்வுகள் முடியாமையைக் குறிக்கின்றன.

(குளங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு முழுமையானதல்லாமலிருக்கின்றமைக்கு மன்னிக்கவும்.)

இவை யாவற்றினையும்விட மிகவும் சிறிய அளவினதான நீர்த்தேக்கங்களும் இருக்கின்றன. அதாவது, யாழ். மாவட்டத்தில் 30 குளங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 67 குளங்களும், மன்னார் மாவட்டத்தில் 80 குளங்களும், திருகோணமலை மாவட்டத்தில் 158 குளங்களும், வவுனியாவில் 168 குளங்களும் அடையாளம் காணப்பட்டு இருக்கின்றன. அவற்றின் பட்டியல்களை இங்கு தரமுடியவில்லை. மேலே கூறப்பட்ட நீர்த்தேக்கங்கள் யாவும் பெருமளவில் அடையாளம் காணப்பட்டனவையாக இருக்கின்றனவேயொழிய முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவுமில்லை, பூரணத்துவமான பயன்பாடும் கிடைக்கவில்லை. ஆகவே, இவ்வாறு அடையாளம் காணப்பட்டிருக்கும் குளங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்து பயன்பெறும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அதாவது அபிவிருத்தி இயக்கங்கள் மூலமோ, கூட்டுறவு அடிப்படையிலேயோ சிரமதானப் பணிகள் மூலம் இம்முயற்சியினை மேற்கொண்டால் கூடுதலான பயன்பாட்டினைப் பெறமுடியும். இவையாவும் ஒரு நிறுவன

ரீதியான இயக்கங்கள் மூலமாகத்தான் நடைமுறைப்படுத்த முடியும்.

மேலும் நீர்வளங்களைப் பேணிப் பாதுகாப்பதுடன் அவற்றை விவசாய விருத்திக்கும் பயன்படும் வகையில் நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு திட்டமிட்ட முறையில் நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்குவதன் மூலம் பண்ணை முறையிலான விவசாய அபிவிருத்தியும் மேற்கொள்ளலாம். அத்துடன் குடியேற்றத் திட்டங்களையும் அமைத்து காணியற்ற மக்களுக்கு காணி வழங்கி, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்யலாம். இவ்வாறு குடியேற்றம் நடைபெற்று வரும்போதுதான் அங்கு நகராக்கமும் ஏற்பட ஏதுவாகிறது.

இதுகாறும் உள்நாட்டு நீர்வளங்களைப் பற்றி ஆராய்ந்த போதும் வடக்கு, கிழக்கு இலங்கையைப் பொறுத்தவரை புதிய நன்னீர் வளங்களை உருவாக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதையும் மறுப்பதற்கில்லை. அதாவது கடற்கரைப் பகுதிகள் நீண்டதாக இருக்கின்றமை காரணமாக ஏராளமான கடனீரேரிகள் காணப்படுகின்றன. இவற்றின் குறுக்கே அணைகட்டி நன்னீராக்கும் முயற்சியில் ஈடுபட்டால், அவற்றிலிருந்து அதிக பலாபலனைப் பெற்றுக்கொள்ள முடியும். அதாவது நீர்ப்பாசனத்துக்கு மட்டுமன்றி, நன்னீர் மீன் வளர்ப்புக்கும் உதவியாக இருக்கும். ஆகவே வடக்கு, கிழக்கு இலங்கையைப் பொறுத்தவரை தரைகீழ் நீரிலும், மழைவீழ்ச்சியிலும் மட்டும் தான் தங்கியிருக்க வேண்டும் என்றதொரு அச்சமான நிலைக்கு நாம் அஞ்சத் தேவையில்லை. கடனீரேரிகளை நன்னீர்த் தேக்கங்களாக மாற்றும் முயற்சிக்கு அதிகளவான பொருளாதார வசதி தேவைப்பட்டாலுங் கூட அவை நிறைவேறும் பட்சத்தில் தன்னிறைவுக்கு மீறிய பொருளாதார அபிவிருத்தி ஏற்படும்.

வட இலங்கையைப் பொறுத்தவரையில் நீண்டகால அடிப்படையில் நன்னீர் கொண்டவையாக மாற்றப்படக் கூடிய 13 கடனீரேரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆனையிறவுக் கடனீரேரி, வடமராட்சிக் கடனீரேரி, யாழ்ப்பாணத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள தெற்குக் கடனீரேரி ஆகிய மூன்றும் முக்கியமானவை. ஆனையிறவுக் கடனீரேரி பரப்பளவில் 19 000 ஏக்கர்களைக் கொண்டிருப்பதோடு சராசரி ஆழமாக 4 அடியைக் கொண்டுள்ளது. இரணைமடுக் குளத்தின் மேலதிக நீர் கனகராயன் ஆற்றின் மூலம் இங்கு பாய்கிறது. இது ஒரு நீண்டகாலத் திட்டமாக இருந்து வருகிறபோதும் அதனை நடைமுறைப்படுத்துவதில் தேவையற்ற காலதாமதம் காட்டப்பட்டு வருகிறது. கடல் உப்புநீர் கலப்பானது சுண்டிக்குளத்திலுள்ள மணல் குறுக்கு மட்டத்தின் ஊடாக வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலத்திலும், ஆனையிறவுப் பாலத்தினூடாக தென்மேல் பருவக்காற்றுக் காலத்திலும் இடம்பெறுகிறது. ஆனல் இவ்விரு முகாம்களும் சாத்திய பூர்வமாக அடைபடும் போதுதான் ஆனையிறவுக் கடனீரேரி ஒரு நன்னீரேரியாக மாறமுடியும். இதேபோன்று வடமராட்சிக் கடனீரேரியும் பரப்பளவில் 7 300 ஏக்கர்களாக இருப்பதுடன் சராசரி ஆழமாக 5 அடியைக் கொண்டுள்ளது. இவ்வேரியின் வடமேல் கழிமுகத்தின் ஊடாக உப்புநீர் சென்று கலப்பதைத் தடுக்குமுகமாக 1948-ல் தொண்டமாஞறு குறுக்கணை மதகு அமைக்கப்பட்டது. துரதிஸ்டவசமாக இந்நன்னீர் சேமிப்பு அவ்வளவு தூரம் வெற்றியளிக்கவில்லை. இதற்கு ஒரு காரணமாக உப்புநீர் மீண்டும் கலப்பதனை மக்கள் வரவேற்பதாகக் குறை கூறப்படுகிறது. இத்துடன் தென்கடனீரேரியும் 6 400 ஏக்கர் பரப்பளவும் 5 அடி ஆழமும் கொண்டதொன்ருகும். இதற்கும் கடற்கழிமுகத்திற்கும் அண்மையாக உப்புநீர் விலக்கி அமைப்பொன்று நிர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான நன்னீரை உள்ளூரிலிருந்து பெய்யும் மழையிலிருந்தே பெறவேண்டியுள்ளது. எனவே, இவற்றைப் போன்று ஒவ்வொரு கடனீரேரியையும் நன்னீராக்கும் பட்சத்தில் நாம் அவற்றின் அதியுயர்ந்த பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே பேராசிரியர் குலரத்தினம் கூறியதைப் போன்றமூவளங்கள் யாவும் பூரணமான ஆய்வுக்குட்படுத்தப் படாதவரை பொருளாதார அபிவிருத்தி ஏற்பட முடியாது என்பதற்கிணங்க நாம் வடக்கு கிழக்கு இலங்கையின் நீர்வளம், கனிவளம், கடல்படுவளம், மனிதவளம் ஆகிய எல்லா வளங்களையும் பூரணமானதொரு ஆய்வுக்குட்படுத்தி, அவற்றினை முழுமையாகப் பயன்படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபட்டால், இப்பிரதேசங்கள் பொன் கொழிக்கும் பூமியாக மாறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ★

# "தேம்பாவணி ஒரு சமயக் கதையினைக் கூறுவதாக அமைந்த போதிலும்; அது ஒரு சிறந்த இலக்கிய நூலாகும்"

தமிழ் இலக்கியப் பரப்பினை தமிழர்மட்டுமன்றி, வட நாட்டாரும் ஐரோப்பிய மத வாதிகள் சிலரும், இஸ்லாமியர் சிலரும் அணி செய்துள்ளனர். இஸ்லாமியரிலே உமறுப்புலவர் அவர்களது சமயக் கருத்தை உள்ளிட்ட 'சீராப்புராணம்' என்னும் சிறந்த இலக்கியத்தை யாத்தார் என்றால் ஐரோப்பிய பாதிரியான கொன்ஸ்டான்ஸ் ஜோசப்பேசி எனும் வீரமாமுனிவர் கிறிஸ்தவ சமயக் கருத்தை உள்ளீடாக வைத்து சிறந்த தமிழ் இலக்கியம் யாத்தார் என்றால் அது மிகையாகாது.

தமிழ்மொழி இலக்கியத்தில் இந்து சமயத்தில் குறிப்பாக சைவம், வைஷ்ணம், மற்றும் சமணம், பௌத்தம் போன்ற சமயக்கருத்துக்களைக் கூறும் நூல்கள் உள. தமிழ் இலக்கியத்தைப் படிப்பவர் இலக்கியத்தின் ஊடாக சமயக்கருத்துக்களையும் படிக்க வேண்டியவராகிறார். ஏனெனில் அநேகமாகச் சமயக்கருத்துடைய நூல்களே இலக்கியங்களாக உள்ளன.

குறிப்பிட்ட காலப்பகுதியிலே, இருந்த அரசியல், பொருளாதார சமய, கலை, கலாச்சார அமைப்புக்கும், தேவைக்கும் ஏற்பவே இலக்கியங்கள் அக்காலத்தில் எழுவது தவிர்க்கமுடியாதது என்பதை தமிழ்மொழி வரலாற்றினை நோக்கும் போது அறியக்கூடியதாயிருக்கிறது. இந்த வகையிலே தான் 18ஆம் நூற்றாண்டின் மூற்பகுதியிலே கிறிஸ்தவ சமயத்தினைப் பரப்ப தமிழ் நாட்டிற்கு வந்த 'பேசி' எனும் இத்தாலி நாட்டின் மதகுரு அக்காலத்தின் தேவையின் நிமித்தம் 'தேம்பாவணி' எனும் 'கிறிஸ்தவ சமயக்கருத்தினைக் கொண்டு, தமிழ் மொழிக்குரிய சிறந்த இலக்கிய நூலை ஆக்கினார்.

இவரிடமுள்ள தமிழ்ப்புலமையை அறிந்த தமிழறிஞர் இவரை வீரமாமுனிவர் என அழைத்தனர். தமிழ் மொழியிலுள்ள இலக்கண, இலக்கிய நூல்களைத் துறைபோகக் கற்று அவற்றிலே பாண்டித்தியம் அடைந்தவர் என்பதை அவருடைய நூல்கள் எல்லாவற்றிலும் காணலாம், சங்கத் தமிழ் நூல்கள் தொடக்கம் இவர் வாழ்ந்த காலப்பகுதியிலே உள்ள நூல்களில் நல்லறிவு உள்ளவராவார். சோழர் காலக் காவியங்களில் ஊறித்திளைத்த வீரமாமுனிவர் பெருங்காப்பிய மரபினைப் பின்பற்றி தமது கிறிஸ்தவ சமயக் கருத்தினை தமிழ் இலக்கியமாகச் செய்துள்ளார். இவர் செய்த 'சதுரகராதி' தமிழில் எழுந்த முதல் அகராதியாகும். இப்படி இவர் தமிழுக்காற்றிய பணியிலே ஒன்றுதான் 'தேம்பாவணி' தோன்றியதாகும்.

''தேம்பாவணி'' என்னும் கிறிஸ்தவசமய தமிழ்க்காவியம் கிறிஸ்து பெருமானுக்கு வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றையும், கிறிஸ்து பெருமானின் பாடு மரணங்களையும், பழைய ஏற்பாட்டு வரலாறுகள் பலவற்றையும் எளிய, சிறந்த நடையில் பல அணிகளுஞ் செறிய நயமுடன் சுவைபட எடுத்துரைக்கிறது. தன்னிகரில்லாத்தலைவன் ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருட்களையும் உள்ளிட்டு செய்யுளில் செப்புவதே காவியம் ஆகும். இந்தப் பெருங்காப்பிய விதிக்கமைய தேம்பாவணி ஆக்கப்பட்டிருப்பதால், அது ஓர் சிறந்த இலக்கிய நூல் எனலாம்

— கல்முனை விஜயா —

தேம்பாவணிக்கு வாடாத மாலை என்று பொருளாகும். சிறந்த அணிகலனே இக்காவியம் அலங்கரிக்கப்பட்டிருப்பதும், இலக்கிய நூலுக்குரிய சிறப்பம்சமாகும். முப்பெருங்காண்டங்களையுடையது. மூப்பத்தாறுபடலங்களையும், 3615 விருத்தப்பாக்களையும் தொண்ணூறு சந்த வேறு பாடுகளையும் கொண்டுள்ளது. இத்தகைய இலட்சணங்களும் தேம்பாவணி ஒரு சிறந்த இலக்கியநூல் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அணி, விருத்தம், சந்தங்கள், காவியவகைக்குரிய சிறப்பாகையால் தேம்பாவணி ஒரு சிறந்த இலக்கியமாகும்.

தமிழ்க்காப்பியங்களில் அநேகமானவை முதல்நூல்களை அடிப்படையாகக் கொண்ட வழிநூல்களாக எழுந்தன. இப்படித்தான் 1665 இல் ஸ்பானிய நாட்டிலே வாழ்ந்த பரிசுத்தகன்னியரில் ஒருவரான ''மேரி. அகிர் தாள்'' என்னும் அம்மையார் எழுதிய தேவமாதாவின் வரலாறே தேம்பாவணிக்கு முதல் நூலாகும். மோட்சம், நரகம் பற்றிய விளக்கம் தாந்தே என்னும் இத்தாலியப் புலவனின் கற்பனைபோல உள்ளது. இதனைக் கிறிஸ்தவ வேதத்தின் சுருக்கம் என்றே அறிஞர் மதிப்பிடுகின்றனர். இவ்வாறு தமிழ்மரபு மாறாது இலக்கியநயம் மிகுந்து காணப்படும் கிறிஸ்தவ சமயநூல் தேம்பாவணி என்றால் அது மிகையாகாது எனலாம்.

கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, திருக்குறள் முதலிய தமிழ் நூல்களின் கருத்துக்களும் சொற்றொடர்களும் ஆங்காங்கே தேம்பாவணியில் காணப்படுகின்றன. பிறநாட்டுக் கதையானாலும் நாடு, நகர வர்ணனை தமிழ்நாடு பற்றியதாக உள்ளது.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்......'' என்ற வள்ளுவர் வாக்கினை, ''உழுதுண்பார் உயிர் வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்பார் எனில்......'' என்று கூறியுள்ளார். தேம்பாவணியின் அமைப்பு முறையிலே சீவகசிந்தாமணியைப் பின்பற்றியது போலும், போக்கிலே கம்பராமாயணத்தைப் போலும் காணப்படுகிறது. கம்பர், கச்சியப்பசிவாச்சாரியார், சேக்கிழார் சுவாமிகள் போன்ற காவியகர்த்தாக்களின் எண்ணப் போக்குகள், சொற்றொடர்கள், சொற்கள் என்பன தேம்பாவணியிலே காணப்படுபின்றன. கிறிஸ்தவ நூலானாலும் அதிலே தமிழ்நாட்டில் வழங்கும் இந்துசமயக்கதைகளையும் அமைத்துச் சொல்லியிருந்தாலும், எருசலேம்பற்றி கிறிஸ்தவ சமயக் கருத்தைப் பாடினாலும் தமிழ்நாடு பற்றியும், தமிழ்நாட்டில் அவர்கற்ற தமிழ் இலக்கியங்களின் செல்வாக்கு அவரது தேம்பாவணியில் மேலோங்கி இருப்பது தெரிகிறது. இது கவித்துவத்துக்கும், கவிஞனுக்கும் பிரிக்க முடியாததுமாகும். எனவே இதுகூட தேம்பாவணியை ஒரு சிறந்த இலக்கிய நூல் என்பதற்குரிய காரணமாகிறது.

உயர்வு நவிற்சியணி, இல்பொருள் உவமையணி என்பன தேம்பாவணியில் களிநடம் புரிகின்றன. எருசலேம் என்ற நகரைச் சிறப்பிக்கப் புகுந்த வீரமாமுனிவர்...

''நீரல்லது அலையில்லது; நிறைவான் பொருள்வோர் போரல்லது பகையில்லது'' எனச் சிறப்பித்துள்ளார்.

''வெண்முகில்கள் கடலிற் சென்று நீரை முகந்து கருநிறம் பெற்றன'' என்பதை—

''நீறணிந்த கடவுளரைச் சிவபிரான் நிறமென வெண்மையாகச் சென்ற முகில்கள் கடலில் நீரை முகந்தபின் திருமாலின் கருநிறம் பெற்று மீண்டன'' என்று கம்பரும்,

கலைமகளுருவென் வெண்மையாய்ச் சென்ற முகில்கள்; கடல் நீரைப் பருகி உமையவள் உருவெனக் கருமை பெற்று மீண்டன''—என்று நைடத ஆசிரியரும் கூற:

''வெண்கொடியுருக் கொடு விளங்கிக் கடல்நீர் பருகிக் கருமத கரியின மெனத்தோன்றின'' என்று வீரமாமுனிவர் சிறப்பிக்கின்றார்.

பரத்தையரின் வாய்மொழி இனிதாய்த்தோன்றினாலும், அது தீமையையே கொடுக்கும் என்பதை,

''கடலைக்கடைய அமிர்தமொடு கடுவும் பிறந்ததெனப் படலைக்கதையாய் அறிந்ததலால் பயனாய் கண்டிலை'' —

என்று ஓரிடத்திற் கூறுகிறார். இவைகளும் தமிழ் இலக்கியக் கருவூலங்கள் தேம்பாவணியில் செறிந்திருக்கின்றன என்பதற்குச் சான்றுகளாகும்.

எனவே, மேற்சொன்னயாவற்றையும் ஒன்று திரட்டிப் பார்க்கும்போது தேம்பாவணி என்னும் கிறிஸ்தவச் சமயநூல் ஒரு சிறப்புமிக்க தமிழ் இலக்கிய நூல் என்பது தெளிவாகும். பெருங்காப்பிய அமைப்புமுறை, செய்யுள் வகை, அணிகள், சந்தங்கள் என்பன கலந்து மிளிர்வதனால் இந்நூல் இலக்கியநயம் மிகுந்து காணப்படுகிறது. தமிழ் காப்பியங்களைப் பயின்ற வீரமாமுனிவர் அவைகளைப் போலவே கிறிஸ்தவசமய நூலொன்றும் இருக்க வேண்டுமென விரும்பித் தமிழ் மக்களும் விழைந்து பயிலுமாறு தேம்பாவணியை இயற்றியுள்ளார். கிறிஸ்தவ சமயமில்லாத ஏனைய சமயத்தவரும் இதனை விரும்பிப் பயில்வதே இதனை ஒரு சிறந்த இலக்கியநூல் என்பதற்குரிய சிறப்புச் சான்றாகும். அந்த வகையிலே வீரமாமுனிவர் வெற்றியும் பெற்றுள்ளார். எனவே தேம்பாவணி கிறிஸ்தவ சமயக் கதையினைக் கூறுவதாக அமைந்த போதிலும்; அது சிறந்த தமிழ் இலக்கியநூல் என்பது புலனாகிறது. ★

# கலைஞர் கோட்டம்



பெயர்: ராஜேஸ்வரன்

வேறு பெயர்: இ. விஜயேந்திரன்

புனைபெயர்கள்:

- ★ கவிமுருகதாஸன்
- ★ விஜயாவிந்தன்

பிறந்த இடம்: மாவிட்டபுரம்

முகவரி: தெல்லிப்பழை

## அறிமுகம்:

செவ்வந்தியில் ஆரம்பமாகிய 'கலைஞர் கோட்டம் பகுதியில்' இலங்கைக் கலைஞர் திரு. இ. ராஜேஸ்வரன் (விஜயேந்திரன்) அவர்களை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம். தனியே ஒரு துறையில் மட்டுமன்றி, கலைத் துறையில் பூரணத்துவம் பெற்ற இப் பிறவிக் கலைஞரை வாசகர்கள் மத்தியில் மேலும் அறிமுகப்படுத்துவதோடு இவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து கலைத் துறையில் மென்மேலும் பல சாதனைகள் புரிந்து சிறப்புற வாழ்த்துகிறோம்.

ப. சிவபாலன்

## சில தகவல்கள்:

### நடிப்பு:

- ★ 1960-ம் ஆண்டு கோப்பாய் கலைவளர்ச்சி கழகத்தின் 'கட்டப்பொம்மன்' நாடகத்தில் வில்லன் பாத்திரத்தில் முதன்முதலில் நடித்தார்.
- ★ இதுவரையில் நடித்த நாடகங்கள் - 45.
- ★ தனித்து நடித்தது (9 பாத்திரங்களில்) 376 தடவைகள்.

### சினிமா:

- ★ சர்வதேசப் புகழ் டைரக்டர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிசினால் சிபார்சு செய்யப்பட்டு முதலில் 'பொன்மணி' படத்தில் வில்லனாக ஒப்பந்தமாகிப் பின்னர் சில சம்பவங்களால் நடிக்காது விட்டார். தற்போது சுக்ரன் பிலிம்ஸ் 'நெஞ்சுக்குத் தெரியும்' படத்தில் கௌரவ வில்லனாக நடிக்கிறார்.



# உலக நாடுகளிலே ஜனநாயகம்.

க. கணேசராசா
க. பொ. த. (உயர்தரம்)
நீர்வேலி.

அரசுகள் தோன்றுகின்றன, வீழ்கின்றன. இவை வாக்காளரின் வாக்குச் சீட்டினுலே ஏற்படலாம். அல்லது புரட்சியாளரின் துப்பாக்கியினுல் ஏற்படலாம். உலகம் என்னும் வரலாற்றுப் புத்தகத்தில் இவை இரண்டுக்கும் சான்றுகள் உண்டு.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகள் ஆயுதப் புரட்சியாகும். ஆயுதங்களின் மூலம் இங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனுல் பிரித்தானியா, அமெரிக்கா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வாக்காளரின் வாக்கு சீட்டினுல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

'வல்லவன் பிழைப்பான்'' என்ற சாள்ஸ் டார்விளின் பரிணும விதிக்கு இணங்க வல்லமையுள்ள தனி மனிதனுல் நடாத்தப்படும் ஆட்சி சர்வாதிகார ஆட்சியாகும். ஆனுல் மக்களின் மூலம் தெரியப்பட்ட பிரதிநிதிகள் சபையிடம் ஆட்சியை ஒப்படைத்து அதன்மூலம் நடைபெறும் ஆட்சி ஜனநாயக ஆட்சியாகும்.

ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கனின் கூற்றை நோக்குவோமேயானுல் ''மக்களால் மக்

---

★ 'பைலட் பிரேம்நாத்' படத்தில் வில்லனுக நடித்துள்ளார். மேக்கப் இல்லாது நடித்து நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பாராட்டைப் பெற்ருர்.

## நடித்துப் பெயர் பெற்ற நாடகங்கள்:

★ காதலா? கடமையா?, மலர்ந்த வாழ்வு, கட்டப்பொம்மன் போன்றவை

★ தனித்துவமான பாணியில் 376 தடவைகளுக்கும் மேல் நடித்து அபார சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

## எழுத்துத் துறை:

★ 1950-ல் எழுதத் தொடங்கினுர். 50-க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். 30 நாடகங்களை எழுதியுள்ளார். மற்றும் 8 நாவல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய வரலாற்று நூல்களில் 'ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை' என்னும் நூல் பாராட்டுப் பெற்றது.

★ 'வைகறை' என்னும் முத்திங்கள் இதழின் ஆசிரியராக இருந்துள்ளார்.

★ 'விஜயா', 'நடிகன்' மாதப் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருக்கிருர். நடிகன் தொடர்ந்து வருகிறது.

## பாராட்டி வழங்கப்பட்ட பட்டங்கள்:

★ 'நவரச மன்னன்' 1976-ல் பண்டிதர் கந்தையா அவர்கள் வரணி வித்தியாலய கலைநிகழ்ச்சியில் வைத்து வழங்கினுர்.

★ 'ரசிக விற்பன்னர்' கரணவாய் கலை நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.

★ 'கலைஞானமணி' கரணவாயில் வைத்து வழங்கப்பட்டது.

இப்பகுதியில், இலைமறை காயாகத் திகழும் சகல ஈழத்துக் கலைஞர்களும் அறிமுகப்படுத்தப் படுவார்கள். அவர்கள் தங்கள் விபரம், புகைப்படம் முதலியவற்றுடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். எமக்குக் கிடைக்கும் ஒழுங்கின் அடிப்படையில் அவை பிரசுரமாகும்.

ஆசிரியர்.

களுக்காக நடாத்தப்படும் மக்கள் ஆட்சியே ஜன நாயகம்'' என்பது அவரின் கூற்றுகும்.

ஜனநாயகம் பற்றித் தவறான கருத்துக்கள் சர்வாதிகார ஆட்சியினரால் கூறப்படுவதை மறுப்பதற்கில்லை. முசோலினி, ஹிட்லர் போன்றவர்கள் ஜனநாயக ஆட்சி என்பது ''மடத்தனமான தும், ஊழல் நிறைந்ததுமானதும்'' என்று குறிப்பிடுகின்றார்கள். ''பாராளுமன்றம் என்பது வெறும் பேச்சு மடம்'' என்று குறிப்பிடுகின்றார்கள். ஆனால் அங்குதான் முக்கியமான பல விடயங்கள் தீர்மானிக்கப்படுவதை குறிப்பிடப்பட்ட சர்வாதிகாரிகள் அறியவில்லைப் போலும், தனி ஒருவனின் தீர்மானத்தை விட பலபேர் ஆராய்ந்து எடுக்கும் தீர்மானம் நிச்சயமாகச் சிறந்ததாக இருக்கும் என்பது உலக அரசியல் அறிஞர்களின் முடிவாகும்.




உலக நாடுகளில் மாற்றம் நடைபெறுவது இயற்கை. அது அரசியல் துறையிலாயினும் சரி, பொருளாதாரத் துறையிலாயினும் சரி, அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றத்தை மேலெழுந்த வாரியாக நோக்குவோமாயின் ஆரம்பத்தில் மனிதனை மனிதன் விலைக்கு வாங்கும் ஆண்டான் அடிமை சமுதாயம் நிலவியது. பணம், சொத்து உள்ளவன் அது இல்லாதவனை விலைக்கு வாங்கினான். பின்பு காலமாற்றத்தால் முடியாட்சி நடைபெற்றது. அதாவது அரசர்கள், சிற்றரசர்கள் ஆகியோரின் ஆளுகையின் கீழ் குடிமக்கள் வாழ்ந்தார்கள். இன்றும் முடியாட்சியின் சாயல் முடி, பிரபுக்கள் சபை என்ற வகையால் பிரித்தானியாவில் பின்பற்றப்படுவதினை அறியக் கூடியதாக உள்ளது. பின்பு சர்வாதிகார ஆட்சி நடைபெற்றது. அதன்பின்பு குடியாட்சி மலர்ந்தது. அதாவது மக்களாட்சி மலரந்தது.

தற்போதைய நிலையில் ஜனநாயக ஆட்சியை விடச் சிறப்பான ஆட்சி உலகில் இல்லை என்னும் அளவுக்கு ஜனநாயகம் உலக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் எதென்ஸ் என்னும் நகரில் ஜனநாயகம் தோன்றியது. பின்பு பல நாடுகளிலும் பரவியுள்ளது. ஒரு மனிதனின் சகல உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமானல் ஜன்நாயக ஆட்சியை விட வேறு எந்த ஆட்சி முறைகளினாலும் சாத்தியம் இல்லை.

நிலக்கடலை வியாபாரி ஜனாதிபதியாக வர முடியுமானல் அது ஜனநாயகத்தைத் தவிர வேறு எந்த ஆட்சி முறைகளினாலும் சாத்தியம் இல்லை. ★

## வர்க்க பேதம்

**ஜெ. கி. ஜெயசீலன்**
**வட்டுக்கோட்டை.**

வாழ்வை ஓட்ட
வள்ளமேறி
வலையுடன் ஆழி
வலம் வருகின்றான்;
வளம்படை மாந்தர்
வயிறும் அவனின்
வரவால் வீங்கிவிட
''வலைஞன் தானே
வக்கிலாதவன்''
வர்க்க பேதங் காட்டுவர்,
வாயாலன்று உண்டதை மறந்து.


---

★ எந்த மனிதனும் தன் சொந்த ஊரில் தீர்க்கதரிசியாக மாட்டான்.
— ஆங்கிலப் பழமொழி.

★ தைரியத்துக்கான சோதனை தற்கொலை செய்துகொண்டு மடிவதில் இல்லை. வாழ்வதில்தான் இருக்கிறது. — ஆல்பிரட்

# சீதனப் பேயே தொலைந்து போ!

இளம் பிராயத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் ஆண் அல்லது ஒரு பெண்ணை எடுத்து நோக்கின் அவர்கட்குச் சந்தோஷமாய், சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் வாழ்க்கையை நடாத்துதலே விருப்பமாகும். அதாவது சௌகரியமாய் சிறந்த வீடு, சிறந்த உடைகள், மேலும் ஏதாவது முக்கிய காரியத்தை ஆற்றி அதன் மூலம் தான் வாழ வேண்டும் என்ற எண்ணமுமே முக்கிய விருப்புக்கள் ஆகும். இவைமட்டுமல்ல, இன்னும் ஆயிரமாயிரம் ஆசைகளை வாலிப இதயங்கள் வளர்த்துக்கொண்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானதொன்று, விவாகம் பண்ணி சிறந்த வாழ்க்கையுடையவராய் வாழு



தலாகும். ஆனால் இவ்விவாகமானது சிற்சில சந்தர்ப்பங்களில் வாழ்க்கையையே சூறாவளியாக மாற்றிவிடுவதுண்டு. காரணம் விவாகச் சடங்கின்போது எழும் சீதனப் பிரச்சனையாகும்.

சீதனம் என்றால் ஒரு விவாகச் சடங்கின் போது பெண் வீட்டாரினால் அளிக்கப்படும் ஒரு வேதனமாகும். இவ்வேதனமானது தகுதிக்குத் தக்கபடி குறைந்தும் கூடியும் வேறுபடும். ஆரம்பத்தில் இது செல்வந்தர்களால் தம் பெண்ணின் நல்வாழ்வுக்காக அளிக்கப்பட்டது. ஆனால் காலப் போக்கில் இது ஒவ்வொரு விவாகச் சடங்கின் போதும் ஆண்மக்களைப் பெற்றெடுத்த ஒவ்வொரு பெற்றோரின் வாயிலும் நர்த்தனமாடத் தொடங்கியது.

ஆனால் இன்று, 21-ம் நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்திலும் இச்சீதனம் என்னும் பேய் தலைவிரிந்தாடுவது ஒரு கேலிக்கிடமான செய்தியல்லவா? இச் சீதனம் என்னும் கைக்கூலி ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை பிறப்பதே துரதிஷ்டம் என எண்ண இடமளிக்கின்றது. இதை அறிந்துதானோ என்னவோ நம்முன்னோர், "ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்றனர்.


செல்வி செ. மாலினி

சுண்டுக்குளி மகளிர் வித்தியாலயம்

க. பொ. த. (உயர்தரம்)


ஆதியில் ஒரு இனமக்கள் பெண் குழந்தை பிறந்தால் அதை அதிர்ஷ்டக் குறைவாக எண்ணி அப்பால்மணம் மாறாப் பசுஞ்சிறாரை பணத்தாசை கொண்டலையும் இம்மாயை உலகைத் தரிசிக்க முன்பு உயிருடன் புதைத்தனராம். முன்னேறி வரும் விஞ்ஞான யுகத்திலும் இந்நிலை இருக்கக் காரணம் என்னவென்றால் பெண்ணென்றால் பெருஞ்சீதனம் வேண்டுமென்பதேயாகும். காலச் சக்கரம் இப்படியே சுழலுமாயின் பெண்ணினம் சீதனம் எனுங் கொடிய சூறாவளியில் அகப்பட்டு சிக்கிச் சீரழிய வேண்டியதுதான். இதனால் பெண்ணைப் பெற்றவர்களும் காலமெல்லாம் கண்ணீரில் கலங்க வேண்டியதுதான்.

இந்நிலை மாறவேண்டும். உலகிலேயே அரும் பெரும் பொருளான அன்பும் பண்பும் நிறைந்த பெண்கள், அடிக்கடி தரகர்களினாலும், பெண் பார்க்கும் பிரமுகர்களாலும் கசக்கிப் பிழியப் படும் நிலை மாறவேண்டும். இச் சீதனத்தினால் பலவகைத் தீமைகள் உலகில் உலாவுகின்றன. மணப்பெண்ணின் பொருளை நாடித் திருமணம்

செய்தல் ஒரு தாழ்த்தப்பட்ட செயலன்றோ? பெண்களுக்குட்பட்டு ஆண்கள் வாழ்வது சீதனப் பேயின் கொடுமையன்றோ?

பெண்கள் எல்லோரும் ஒன்றிணைந்து சீதனம் வாங்காதவர்களை மணமுடிப்போம் என்றும், ஆண்கள் எல்லோரும் சீதனம் வாங்காமல் மணமுடிப்போம் என்றும் ஒரு திடகாத்திர முடிவு எடுக்க வேண்டும்.

நாளைய சமுதாயத்தை நல்வழி காட்டி அழைத்துச் செல்ல வேண்டிய பெண்குலமே! ஏன் நீங்கள் உங்களையும் கொடுத்து, சீதனம் எனும் பெயரில் உங்கள் பணத்தையும் அள்ளிக் கொடுத்து மனைவி என்ற ஸ்தானத்தில் சமையல்காரியாகவும் அடிமையாகவும் இருப்பதைவிட உங்கள் சீதனப் பணத்தை வைத்துக் கொண்டு நல்வழியிலே சிறந்த வாழ்க்கை நடாத்தினால் உங்களுக்கென்று ஒரு நிம்மதியாவது மிஞ்சும் அல்லவா?

வெள்ளத்தால் அழியாதாம், வெந்தணலால் வேகாதாம், கள்ளரால் கொண்டுசெல்ல முடியாததாம் அன்பு. இத்தகைய மகிமை வாய்ந்த அன்பினையுடைய மனைவியைப் பெறுதலே பெறற்கரிய பேறாகும். பொருளானது இன்றில்லையேல் நாளை தேடிக்கொள்ளலாம். ஆனால் வாழ்வு அப்படியில்லையே. ஆதலால் ஆண்களே! உங்கள் வாழ்க்கைச் சக்கரம் திறம்படச் சுழல்வதற்கு சீதனமல்ல; அன்பும் அறமும் ஒருங்கே இணைந்த மனைவியே சாலச் சிறந்தவள். ஆகவே மின்னலும் நீர்க்குமிழியும் போன்ற பொருளில் மோகங் கொள்ளாது நன்மனைவியை அடையுங்கள். வாங்கும் கை இல்லாவிட்டால் கொடுக்கும் கை இருக்காது. வாங்கும் கை என்று மறைகிறதோ அன்றே சீதனம் என்னும் சொல் மருவிவிடும்.

அன்பை நேசியுங்கள். ஆனால் எதற்கும் என்றும் விலையே பேச முற்படாதீர்கள். அப்படியானால் கண்ணீர் வடித்து, வாடி வதங்கி நிற்கும் பல ஏழை மங்கையரைக் கரை காணாது கலங்கும் தங்கையரைக் கரை சேர்த்த பயனை அடைவீர்கள்.

ஆகையால் எழில் பெற்றிலங்கும் நம் ஈழத்தின் இணையற்ற வீரர்களே! வீராங்கனைகளே! திடமுடன் திரண்டெழுந்து ஈழத்தாயை இழிகுலமாக்கும் இப்பாழும் சீதனப் பேயை உங்கள் நாட்டைவிட்டு ஓட்டுங்கள். அப்போது நம் இல்லறம் நல்லறமாகும். நாமும் நாகரீகமாக வாழும். ★

★ பரிசு பெற்ற சிறுகதை

# யாழினிது!

# குழலினிது!

— எம். ஏ. எம். அஜீவாகிட் —

உழைத்து வந்த களைப்பு சந்திரனுக்கு. என்றாலும் வீதியோரக் காட்சி அவன் மனதில் சுழன்றது. ஆறு குட்டிகள் போட்டிருந்தாலும் ஒன்றையும் இழக்க அது சம்மதிக்கவில்லையே. தாய்ப் பாசம் இத்துணை வலுவுள்ளதா?

''அப்பா''

''என்னம்மா கண்ணு, என்ன வேணும்?''

''ரகு என்னை அடிச்சிட்டாம்பா''

''அம்மா பாத்துக்கிட்டா இருந்தாள் — ராஸ்கல் கையை உடைக்கலையா?''

''ஆனா எனக்கு வலிக்கலேப்பா — ரகு பாவம்பா''

''அடிச்சாங்கிறே, பாவம்னு சொல்றே என்னம்மா?''

''நீ அவனுக்கும் அப்பாவாம், நான் இல்லேன்னேன். அதுதான் அடிச்சான், ஆனா அம்மா என்னைத்தான் திட்டினா, நீ அவனுக்கும் அப்பாவாமே — அம்மா சொல்றா! ஏம்பா?''

''என்னம்மா?''

''நீ நெஜமா அவனுக்கும் அப்பாவா? ஏன் அவனைத் தூக்கவே மாட்டேங்கிறே?''

''ராஜி, நான் உனக்கு மட்டும்தாமா அப்பா''

''நெஜமா?''

''நெஜம்மாத்தாம்மா''

''ம்... ரகு பாவம்பா''

சந்திரன் மெதுவாகக் கனைத்தான். தூரத்தில் சோபாவில் ரகுவைத் தூங்க வைத்துக் கொண்டிருந்த வாணி மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். கணவன் தன்னைப் பார்த்து அசடு வழியச் சிரிப்பதை அவள் கண்டு கொண்டாள்.

''ம்... நல்ல அவசரம் உங்களுக்கு''

''வாவேன் வாணி'' குழந்தை விழிக்குமோ

என்ற பயம் வேறு அவனுக்கு.

''பொறுங்களேன், ரகு தூங்கிக் கொள்ளட்டும்''

''சே, நல்ல ரகுவும் நீயும்'' — என்று அலுத்துக் கொண்டான் அவன். அப்போது, ''நானும் உன்னோடு படுக்கிறேம்பா'' என்று ரகு மெதுவாக முணுமுணுத்தான். ''ம்... அது ஒன்று தான் குறை'' என்று மறுபுறம் திரும்பிப் படுத்தான் அவன். என்றாலும் அவனது உணர்வுகளும் உணர்ச்சிகளும் எதையோ எதிர்பார்த்து விழித்திருந்தன.

சந்திரன் பங்கஜத்தை மணந்தபோது சொர்க்கமே காலடியில் வீழ்ந்ததாக உணர்ந்தான். காதலர்களாகத் திளைத்தபோது ஏற்பட்ட இன்பக் கிளுகிளுப்புகள். ஒயிலாகச் சிரித்து, இதமாக நடந்து, கனிவாகப் பேசும் — பதுமையான பங்கஜம் தனக்குக் கிடைத்தது அவனுக்குக் கனவாகவும் தோன்றியது. அழகுடன் பண்பும் இருந்ததால், 'வசதி'யை அவன் கவனிக்கவில்லை. முதலிரவன்று அவள் சிணுங்கிக் கொண்டதையும் பிணங்கிக் கொண்டதையும் பின் இணங்கிக் கொண்டதையும் நினைத்தால் இன்றும் அவனுக்கு இனித்தது.

மூன்று மாதங்கள் முழுதாக முடியுமுன்பே அவள் முழுகாமல் நின்றாள்.

''என்னங்க நாலு இடத்துக்குச் சரியாகப் போகு முன்பே......''

''தனியாகப் போகாமல், துணையோடுபோக உனக்குக் கசக்குதோ''

''ம்... எனக்கு வெட்கமாக இருக்கு அத்தான்''

''ஏன் அவனும் வந்து நம்ம கும்மாளத்திலே கலந்து கொள்வான்னுதானே''

''போங்க'' என்று அவள் நாணினாள்.

''சரி பங்கு, நமக்கு என்ன குழந்தை பிறக்குமென்று சொல்லேன்''

''உங்களைப் போல...'' என்று அவள் தொடங்க, ''இப்படி அவலட்சணமாக'' என்று அவன் முடித்தான். ''என்னங்க'' என்று சிணுங்கியவளை மெல்ல அணைத்து, ''என்ன பேரு வைக்கலாம்'' என்றான்.

''இப்பவே என்னங்க அவசரம்''

''அப்பதானே ஆறு மாதத்திலே முடியும் - ஆமா சிவாஜி, ஜெமினி, எம்ஜி என்று பேரு வைப்போமா?''

''என்னங்க என்மகன் கண்டவளோடு கூத்தடிக்கிறவன் என்று நெனச்சீங்க''

''சரி நீயே சொல்லேன்''

''ரகு''

''சே, சுத்த கர்நாடகமா இருக்கிறியே நீ''

''இல்லேங்க எனக்கு கனவிலே அப்படி... அப்படி...''

''ஓஹோ, இந்த நூற்றாண்டு அதிசயமோ?''

''என்னவோ அத்தான், ஒரு வெள்ளைத்தாடி பெரியவர் வந்து, 'ரகு'ன்னு பேரு வைச்சா குழந்தையாவது பிழைக்கும் இல்லேன்னு...'' என்று முடிக்கு முன்பே ''சே, என்ன பங்கு இது - நல்லதையே நினைக்க வேண்டிய நேரத்திலே — விளையாட்டுக்கும் இப்படிப் பேசாதே'' என்று பதறிய கணவனை — பூரிப்புடன் பார்த்தாள் பங்கஜம். தனக்காகத் துடிக்கும் ஜீவனல்லவா அது

பங்கஜத்தின் சொல்லைத் தட்ட முடியாமல் 'ரகு' என்று தனது குழந்தைக்குப் பெயரிட்ட சந்திரன் எண்ணிப் பத்தே நாட்களில் பங்குவைப் பறிகொடுத்தான். அன்றிலிருந்து அவன் ரகுவை வெறுத்தான்.

''என்னங்க தூங்கிட்டிங்களா?''

''வாணி''

''பாவம் அந்த ரகு''

''அந்த தரித்திரத்தாலே தானே 'அவளை' இழந்தேன்.

''அதற்கும் இதற்கும் என்னங்க சம்பந்தம்''

''எனக்கென்னவோ''

''ராஜி படுக்கிறாளே, நானும் அப்பாகிட்ட படுக்கிறேனே என்று அந்தப் பச்சைக் குழந்தை கையையும் காலையும் ஆட்டிக் கெஞ்சும்போது ...'' என்றவள் அவன் அதை விரும்பவில்லை என்றதும் நிறுத்தியவள் அவனது இழுப்புக்கு இசைந்து மெதுவாகச் சரிந்தாள். நினைவுகள் ஒழிந்தன. உணர்வுகள் விழித்தன. உணர்ச்சிகள் சிலிர்த்தன.

விளையாட்டுப் பொம்மை யோடு படியேறியவன், ''அப்பா' என்ற குரல் கேட்டு, ''என்னம்மா ராஜி இதோ உனக்...'' என்றவன் ரகுவைக் கண்டு முகம் சுழித்தான்.

''இங்கேண்டா வந்தே''

''எனக்கொரு ஆசையப்பா''

''முகத்திலே விழிக்காதேன்னு சொன்னேனில்லையா?''

''அப்பா எனக்கொரு ஆசையப்பா''

''இந்தா பிடி சனியன்'' என்று பொம்மையைக் கட்டிலில் வீசினான். அந்த விளையாட்டுப் பிள்ளை அதைப் பார்க்கவும் இல்லை. அவனையே ஏக்கத்தோடு பார்த்தது.

''இது வேணும்பா — உன்னோடு படுக்கனும்னு ஆசையா இருக்கப்பா''

''சீ, சனியன்'' என்று கையைத் தூக்கினான் சந்திரன்.

''எனக்கு ஆசையா இருக்கப்பா - இன்னைக்கு மட்டும்பா'

''வாணி, இந்தச் சனியனை யாரு உள்ளே விட்டது'' என்று இரைந்தவாறு குழாயடிக்குச் சென்றான் சந்திரன்.

''எனக்கு ஆசையா இருக்கு ராஜி''

''அப்பா தந்த பொம்மை தானே, நீயே வைச்சுக்க ரகு''

''அது வேணாம் ராஜி''

''அப்ப''

''எனக்கு அப்பாகிட்ட படுக்கனும் ராஜி - ஆசையா இருக்கு''

''அப்பா ஏன் ரகு உன்னில பிரியமில்லே''

''எனக்கு ஒண்ணுமே தெரியாது ராஜி''

''நீ அப்பாவை அடிச்சியா''

''இல்லையே''

''அவருட பேனையை சுவத்தில கீறினியா?''

''ஊஹும்''

''உன்னைப் பாத்தா பாவமா இருக்கு — நான் அப்பாகிட்ட சொல்லவா?''

''ஒன்னையும் அடிச்சா? ராஜி நீ அப்பா தூங்கினப்புறமா வந்து சொல்லேன். நான் அம்மாகிட்ட தூங்காம முழிச்சிருப்பேன். நீ சொன்னதும் நான் போயி அப்பா கிட்ட படுப்பேன், சரியா?

''ரகு நான் நேரத்தோடு தூங்கிடுவேனே. வேணும்னு நீ அப்பா றூம் தெரியும்தானே அவர் கதவைப் பூட்டவே மாட்டார், அதனாலே நீ வத்து எட்டிப் பார். அப்பா தூக்கம்னு மெல்ல வந்து என்னைத் தட்டு, நான் எழும்பி அம்மாகிட்ட வந்துடறேன். என்ன சரிதானே''

ரகு மலர்ச்சியோடு ஓடினான். ஏனென்றால் இன்று இரவுதான் அவன் அப்பாவோடு தூங்கப் போகிறான் — உண்மையாகவே தூங்கப் போகிறான்.

ஐந்து வாட் மின்விளக்கு ஒளியை அடக்கமாக உமிழ்ந்து கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமை இரவு. ஊதுவத்தியின் நறுமணம் அறையில் கிளுகிளுப்பை ஊட்டிக் கொண்டிருந்தது. சந்திரன் காத்திருந்தான். அவன் மட்டுமா? அவனுடன் பாலும் பழமும் அல்லவா கூடவே காத்திருந்தன.

''சே, வாணிக்கு என்ன சொன்னாலும் தெரியாது'' என்று முனங்கியவாறு தனது கரங்கள் இரண்டையும் தேய்த்துக் கொண்டான். அவன் யாருக்காகக் காத்திருந்தான்.

''அப்பாடா, ஒரு வழியாக சனியன் ரகு தூங்கிவிட்டான் போல, அதுதான் அவள் வரும் சப்தம் கேட்கிறது'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவன் - கதவு தள்ளப்படும் சப்தம் கேட்டு சாகாத உணர்வுகளோடும், போராடும் உணர்ச்சிகளோடும் விழிகளை வாசலில் நிறுத்தினான். கதவு திறந்தது — ''வாவேன் வாணி'' என்று அவசரப்பட்டான் சந்திரன். திறந்த கதவின் வழியாக நுழைந்த தலை இதைக் கேட்டதும் நடுங்கியது.

''அப்பா... நான், நான்—' ரகு நடுங்கினான்.

''இப்ப, இங்கே ஏன்டா வந்தே?''

''உன்னோடு படுக்கனும்னு ஆசையப்பா, இன்னைக்கு மட்டும்பா...''

''சனியன் அவள் இருக்க நீ செத்துத் தொலைஞ்சிருக்கணும்''

''இன்னைக்குப் படுத்திட்டு நாளைக்கு வேணும்னு நான் செத்துப் போறேம்பா''

''சீ, போடா கழுதை'' என்று அறைந்தான் சந்திரன். அதிர்ச்சியில் வெளியே வந்து விழுந்தவனை வாணி தாங்கிப் பிடித்துக் கொண்டாள். ரகு பேந்தப் பேந்த விழித்தான். ''அம்மா, அம்மா'' என்று முனகியவாறு, ''இன்னைக்குப் படுத்துட்டு நாளைக்கு வேணும்னு

நான் செத்துப் போறேம்மா'' என்று தன் பிஞ்சுக் கரங்களால் வாணியின் முகத்தை வருடினான். அவளால் பொங்கி வந்த அழுகையை அடக்க முடியவில்லை.

சந்திரனுக்கு அன்று வேலையே ஓடவில்லை. அன்றிரவு தான் நடந்து கொண்டது சரியா, 'இன்னைக்கு மட்டும் படுத்திட்டு நாளைக்கு வேணும்னு நான் செத்துப் போறேம்பா' என்ற குரல் ரீங்காரமிட்டது. முதன்முதலாக அவன் இதயம் நடுங்கியது. கண்ணீர் திரையிட்டது. கண்களை ஒரு கையால் துடைக்கவும் டெலிபோன் அடிக்கவும் சரியாக இருந்தது.

''ஹலோ, சந்திரன் ஹியர். யெஸ். வாணியா? என்னது ரகுவை 'அட்மிட்' பண்ணிட்டியா? ஜன்னியா? எங்கே? வாணி இதோ — இதோ, ஓடி வாறேன்''

சந்திரனைக் கண்டதும் சூழ நின்றவர்கள் வழிவிட்டனர். ''கண்ணே ரகு, ரகு'' என்றவாறு கட்டிலை நோக்கிக் குனிந்தான்.

''ரகு — ரகு நான்தானடா இதோ, இனி ஒவ்வொரு நாளும் என்னோடு தூங்கலாம் ரகு, ரகு' என்று கத்தினான் அங்கே —

''அப்பா, எனக்கு ஆசையா இருக்கப்பா, இன்று மட்டும் உன்னோடு படுத்திட்டு நாளைக்கு வேணும்னு நான் செத்துப் போறேம்பா, அப்பா...அப்பா...அ'' என்று முணங்கியவாறு அந்தச் செல்வத்தின் ஆவி அடங்கிக் கொண்டிருந்தது. ●

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலீசார் காரைக் கைப்பற்றியபோது றைவர் தலையில் அடிபட்டு இரத்தம் அதிகமாகப் பெருகியதால் இறந்து கிளந்தான்.

ரஜனி நால்வரின் மரணத்திற்கும், படுகாயமடைந்தோர்க்கும் எதிராகக் குற்றம் சாட்டப்படுகிறார்.

குற்றவாளி ரஜனியா? பத்மநாதனா? சுந்தரா?

நீங்கள் ஒரு நீதிபதியானல் உங்கள் தீர்ப்பு?

யாழ்நகரில் பலசரக்குச் சாமான்களை நிதான விலையில் பெற நாடுங்கள்.

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்
280, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

முன்னணி அறிவிப்பாளர்கள்

மணிக்குரல் - மேஜர் சண்   எஸ். கே. ராஜன்

இவர்களின் இனிய குரல்களால்
உங்கள் விளம்பரங்களை ஒலிபரப்பிட

பெஸ்ரோன் விளம்பர சேவை
பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்,

# நந்தி மார்க் கற்பூரம்

நந்தி மார்க் கற்பூர தயாரிப்பாளர்களான
"ஸ்ரீ கிருஷ்ணா ரேடர்ஸ்" ஸ்தாபனத்தார் தமது
பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

★ தெய்வீக வழிபாட்டிற்கு இன்றியமையாதது
நந்தி மார்க் கற்பூரம்

★ தரமான பொருட்களால் தயாரிக்கப்பட்டது
நந்தி மார்க் கற்பூரம்

★ பக்தர்கள் இறைவழிபாட்டிற்கு இன்றியமையாதது
நந்தி மார்க் கற்பூரம்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:
**ஸ்ரீ கிருஷ்ணா ரேடேர்ஸ்**
92, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7554



*Visit:*

## Tower Coffee and Cool Bar

For

★ Delicious Short Eats

★ Instant, Delicious nounishing drinks like
Coffee - Ice Coffee - Sherbert
Faluda Sherbert - Milk ShaKe
Nelli Crush - Pine Apple Jucie

ORDERS FOR OCCASSION UNDER TAKEN
RESONABLY PRICED.

324, CLOCK TOWER ROAD,
JAFFNA.

T. Phone: 7891



புதுமை - திறமை - நவீனம்

அச்சிடும் கலையில்
மெச்சிடும் திறமைபெற்றவர்கள்

உங்கள் அச்சிடும் தேவைகளுக்கு
நாடுங்கள்.

## சித்ரா அச்சகம்
(வெலிங்டன் தியேட்டர் அண்மையில்)
இல. 310, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

# ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி

இல. 38, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

கிளை : பலாலி வீதி, கோண்டாவில்.

## I. A. B. (London)
## I. A. A. (London)

லண்டன் பிற்மன் பரீட்சைக்குரிய புதிய வகுப்புக்கள்
19-1-79 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

க. பொ. த. (சாதாரணம்) க. பொ. த. (உயர்தரம்)
வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

With the Best Compliments
from

**K . S . M**
**TEXTILES**
No. 9, Grand Bazaar, JAFFNA.

FOR MODERN
TAILORING

**Fittext**
No. 9, Grand Bazaar,
JAFFNA.

*With the Best Compliments*
*from*

**RADIOS PATHY**
58, Kasthuriyar Road,
JAFFNA.


அச்சுப் பதிவு செட்டியார் அச்சகம்

யாழ். ஸ்ரீதர் சினிமாவில் சாதனை படைக்கும் 4-வது ஜனத்திரள் வாரம்

இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான் தான் விளையாட....



கமலஹாசன், சுஜாதா, ஜெய்சங்கர் மற்றும் பலர் நடித்த

## உயர்ந்தவர்கள்

வெகு விரைவில் எதிர்பாருங்கள் !

எமது பொங்கல் வெளியீடு

தொடர்ந்து சிறந்த வெளியீடுகளை வழங்கிவரும்

யாழ்நகர், ராணி சினிமாவில்

எம். ஜி. ஆர்., அஞ்சலிதேவி நடித்த

## ❁ சக்கரவர்த்தி திருமகள் ❁

தினசரி 4 காட்சிகள்

(புதிய பிரதி)

SEVVENHTI
MONTHLY
பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு பெற்றது 1979


# JOBS ABROAD

Technical Training Suitable to get employment in Sri Lanka & abroad is provided by the leading technical institute in the north.

## NATIONAL INSTITUTES

*57, 59, BANKSHALL STREET, JAFFNA.*

*FOR THE FIRST TIME IN SRI LANKA this Institute Introduces the latest* **AUDIO - VISUAL Teaching Aids for Electric & Gas Welding & the famous RHYTHM METHOD for Morse Code Practice.**

## COURSES

- ★ ELECTRIC ARE & GAS WELDING
- ★ TRANSISTOR TECHNOLOGY
- ★ AUTO - ELECTRICIANS CERTIFICATE
- ★ DIPLOMA IN ELECTRICAL ENGINEERING
- ★ *A. M. I. M. I. LONDON*
- ★ DIPLOMA IN BUILDING TECHNOLOGY
- ★ ELECTRIC WIRING
- ★ RADIO OFFICERS (SHIP)
- ★ PHOTOGRAPHY
- ★ CITY & GUILDS LONDON

## NATIONAL INSTITUTES

57 59 BANKSHALL STREET JAFFNA


அட்டைப் பதிவு கலைவாணி அச்சகம்